உ

காமதகனம் என்னும்

நூதன பெரிய

நவரத்தின ஒப்பாரி

எசிங்ககதகூ உபாத்தியாயர் அருள்வாக்கு
[illegible] கவலர் அவர்கள் பாடலும்
எரிந்தகதகூ [illegible] லாவணிகளும்
12-மாதக் கேள்வி [illegible] வணிகளும்
அடங்கியவை.

[illegible] முத்தியாலுப்பேட்டை

V. A. தியாகராஜசெட்டியார் இயற்றியது.

பதிப்பாளர்:

அமரம்பேடு. இராஜரத்தின முதலியார்
23, தாண்டவராயப்பிள்ளை வீதி,
சென்னை-1.

மலர்மகள் பதிப்பு] 1959 [விலை ந-பை 75

[illegible]டர் காபிரைட்

[illegible] — சரஸ்வதி புத்தகசாலை
[illegible]யார் தெரு, கொழும்பு.

உ

சிவமயம்

காமதகனம் என்னும்

நூதன பெரிய

நவரத்தின ஒப்பாரி

எரிந்தகக்ஷி உபாத்தியாயர் அருள்வாக்கு

திருச்சி. துரைசாமி நாவலர் அவர்கள் பாடலும்

எரிந்தகக்ஷி எரியாதகக்ஷி லாவணிகளும்

12-மாதக் கேள்வி லாவணிகளும்.

சென்னை முத்தியாலுப்பேட்டை

V. A. தியாகராஜ செட்டியார்

இயற்றியதை,

அமரம்பேடு. இராஜரத்தின முதலியார்

23, தாண்டவராயப்பிள்ளை வீதி,

சென்னை-1.

மலர்மகள் பதிப்பு]   1959   [விலை ந-பை 75

கிடைக்குமிடம்:— சரஸ்வதி புத்தகசாலை,

175, செட்டியார்தெரு, கொழும்பு.

ரிஜிஸ்டர் காபிரைட் அறிவிப்பு

முகவுரை

இவ்விந்திய தேசத்தில் வசிக்கும் பற்பல வித்வான்களாலும், பல பாஷைகளையும் உணர்ந்த பாவாணர்களாலும், இக்காமனின் சரித்திரத்தை இயற்றியுள்ளாராயினும், சிலர் அங்கஜன் பரமனின் நெற்றிக்கண்ணினால் எரிந்தானென்றும், சிலர் எரிந்தானென்பது சுத்த பிசகு காமன் எரியவில்லை என்றும், அநேக அரிய பெரிய புராணங்களையெல்லாம் இழுத்துப் போட்டு, பலவித கேள்விகளைக்கேட்டு வாதாடுகின்றனர். ஆதலால் இச்சரித்திரத்தின் விபரம் யாதெனில்:—

யான் சிற்சில புத்தகங்களைக் கண்டதில், மன்மதன் எரிந்ததாகத் தெரிகின்றது. அது எவ்விதமெனில்; ஆதியில் ஸ்ரீமந்நாராயணமூர்த்தி எல்லா ஜீவராசிகளுக்கும் ஆதாரமாக இருக்கும் பொருட்டு, நான்முகனை சிருஷ்டித்து, நான்கு வேதத்தையும் அந்நான்முகர்க்கு அளித்து, ஜீவசிருஷ்டி செய்யும் மார்க்கத்தைப் போதித்து, பின்னால் அங்கஜனை உற்பத்தி செய்து, அவனுக்கு கரும்புவில்லும், பஞ்ச அரும்புக்கணைகளும், கிளிவாகனமும், தென்றற்றேரும், வசந்தனென்னும் சாரதியும் தந்து, பரமேஸ்வரனின் புத்திரியாகிய ரதிதேவியை மணம்முடித்து, சுகபோகமாக வாழ்ந்திருக்கச் செய்தார். அன்றுமுதல் அங்கஜன் சதிபதிகளின்மீது மலர்க்கணை தொடுத்து, மையல் அதிகரிக்கும்படி செய்துவந்தான். அன்றியும், கானகங்களில் தபசுபுரியும் சித்தர் முனிவர்கள் மாத்திரம் போகயிச்சையை வெறுத்து, இந்திரிய சேஷ்டையைத் தவிர்த்து, மலைகளிலும், குன்றுகளிலும் யாகம் வளர்த்தி, எத்தேவர்களைக் குறித்து தபசு புரிகின்றார்களோ, அத்தேவர்களை அவர்கள்செய்யும் யாகாக்கினியின் தணல் இழுத்துவந்து தவம் புரிவோர் கேட்கும் வரங்களை அளிக்கும்படியாகச் செய்யும். இத்தகையதாகவே இராவணன், இந்திரஜித்து, இரணியன், பத்மாசூரன் இன்னும் அநேக அரக்கர்கள் தவம் புரிந்து, வரங்கள் பெற்று மனோகர்வமாய் அமரர்களுக்குத் தீங்கு புரிந்து வந்தனர். அதையறிந்த பரந்தாமன், அவரவர்களுக்குத் தகுந்த திருவவதாரஞ்செய்து, அவ்வரக்கர்களைச் சம்மாரம் செய்வது வழக்கம். இதுநிற்க, நான்முகனின்

பெருவிரலில் அவதரித்த தக்கனென்பவன், ஈசனைநோக்கி அருந்தபசு புரிந்தான். ஈசன் அவன் தபசுக்கு இரங்கி எதிர் வந்து, 'பக்தா! யாது காரணார்த்தமாய் தவம் புரிகின்றனை? உனக்கு வேண்டிய வரம் என்னவோ அதை உரைத்தால், அவ்வரத்தை அட்டியின்றி யான் தருகிறேன்' என, ஈசன் மொழிந்ததைத் தபசிலிருந்த தக்கன் கேட்டு, கண்விழித்து ஈசனைப் பார்த்து, 'சர்வேஸ்வரா! உமது பத்தினியாகிய உமாமகேஸ்வரி எனக்குப் புத்திரியாக ஜெனித்து, தாங்களே வந்து அப்பெண்ணை வரிக்க வேணுமாய்க் கோருகிறேன்' என்று தக்கன் உரைக்க, ஈசன் மனமகிழ்ந்து, 'அன்பா! அவ்விதமே வரமளித்தேன்' எனப் புகன்று மறைந்தனர். பின்னல் தக்கன் மிகுந்த சல்லாபமாக தனது பத்தினியுடன் வாழ்ந்திருக்கும்போது, தக்கனின் அபீஷ்டப்படியே, உமா மகேஸ்வரி அவனுக்குப் பெண்ணாக ஜெனித்தனள். அக் குழந்தைக்கு ஈஸ்வரியெனப் பெயரமைத்து மிகவும் அன்பு பாராட்டி வளர்த்து வந்தான்.

ஈஸ்வரி தக்க பருவமடைந்ததும், ஈசன் சிவகணங்களுடன்வந்து, ஈஸ்வரியைப் பாணிக்கிரஹணம் புரிந்து கைலைக்கு ஏகினர். இதுநிற்க, ஒருநாள் ஈசனுக்கு மாமனாகிய தக்கன், தன் மருமகனையும், புத்திரியையும் காணும் பொருட்டு அதிக இறுமாப்புடனும் அட்டகாசத்துடனும் கைலையை யடைந்தனன். இவனது மனோகர்வத்தை யறிந்த ஈசன் பார்த்தும் பாராதவர்போ லிருந்தார்.

அத்தருவாயில் தக்கன் மிகவும் கடுஞ்சினமுற்று, ஆஹா! என்ன ஆச்சரியம்! நம்மைக் கண்டும் கொஞ்சமேனும் மரியாதையின்றி எழுந்திருக்கவுமில்லை; இவனைத் தேடிவந்த நம்மை அமரும்படியாகவும் தெரிவிக்கவில்லை; நம் மருமகன்தான் இத்தகைய மமதைபூண்டானென்றாலோ நம் புத்திரியும் நம்மிடத்தில் பேசவில்லை; பார்த்தனையா: இவர்களுக்கு திதி, சிருஷ்டி, சம்மாரம், த்ரோபவம், அநுக்கிரகம் என்னும் ஐந்துவித தொழில்களுக்குக் கர்த்தாவாய் விளங்குவதினலல்லவா நம்மை இவன் மதிக்கவில்லை. சரி இது சமயமே

யான் சென்று யாகம்செய்து அமரர்களுக்கு அவிர்ப்பாகம் அளித்து, சகல தேவர்களையும் என் கைவசமாக்கி, அத் திதி, சிருஷ்டி, சம்மாரம், த்ரோபவம், அநுக்கிரகம் என்னும் ஐந்து தொழிலுக்கும் யானே முதல்வனாக விளங்கி, அச் சிவனை யாரும் மதியாது தூஷிக்கும்படியாக நீக்கி வைக்கின்றேன்' என்று தனது இருப்பிடத்திற்குச்சென்று, நான்முகன் விஷ்ணு முதலான தேவர்களை அழைப்பித்து, தனக்குச் சகாயமாக வைத்துக்கொண்டு யாகம் செய்திருந்தான்.

அவ்வேளை ஈஸ்வரி தனது நாதனைப்பார்த்து, 'நாதா! என் பிதா செய்யும் யாகத்தைப் பார்த்து வருகிறேன்' என உரைத்தனள். அதற்கு ஈசன் எவ்வளவோ தடுத்தும் ஈஸ்வரி ஒரே பிடிவாதத்தோடு போவதாகப் பிரயாணித்து தன் தந்தையாகிய தக்கன் செய்யும் யாகசாலையையடைந்து தந்தையைப் பணிந்து நின்றனள்.

மகளைக்கண்ட தக்கனுக்கு மட்டிடாக் கோபம் மீறி, ஈஸ்வரி! அன்று யான் உங்களைப் பார்க்கும்பொருட்டு வந்த போது, மட்டு மரியாதையின்றி நீங்கள் இருந்தீர்களே; இப்பொழுது நீ ஏன் இங்ஙனம் வந்தாய்' என, ஈசனைப் பலவாறு தூஷித்து உமையவளைத் துரத்தினன். இதையறிந்த ஈஸ்வரிக்கு என்றுமிலாத் துயரம் பெருகி, இச்சண்டாளன் வளர்த்த சரீரத்தை நாம் வைத்திருக்கப் போகாது என்று தனது சரீரத்தை அவன் செய்யும் யாகத்தில் உதறிவிட்டு, தனது சத்தான ஆவியுடன் இமாலயமன்னனிடம் சென்று அம்மன்னனுக்குப் புத்திரியாகப் பிறந்து சிவஸ்துதி செய்து வந்தனள்.

இதையெல்லாம் ஞானதிருஷ்டியினல் உணர்ந்த பரமனுக்குக் கடுஞ்சினம் மீறி, தனது நெற்றிக்கண்ணைத் திறந்தவுடனே நெற்றியிலிருந்து சிந்திய வியர்வையினல் வீரபத்திரர் உற்பவித்து, ஈசனது கட்டளையைப்போல் தக்கனிடம்சென்று, தக்கனையும், அவனுடன் இருந்த தேவர்களையும் தனது வாளால் வெட்டி, நமனுலகுக்கு ஏற்றினர். பிறகு ஈசன் மனதிரங்கி, இறந்தவர்களை எழுப்பி விடும்படி வீரபத்திரருக்குக் கட்டளையிட, உடனே வீரபத்திரர் தான் கொன்ற தேவர்களை

யெல்லாம் எழுப்பிவிட்டு, தக்கனை மாத்திரம் ஆட்டுத்தலையை வைத்து எழுப்பிட்டு வந்தார். பிறகு பரமன் இமையமலையிற் போய் ஜனகர், ஜனற்குமாரர் முதலான தொண்டர்களுக்கு சின்முத்திரையாக யோகநிலையில் அமர்ந்து தபசு புரிந்திருந்தார். இவர் செய்யும் தபாக்கினியானது, இந்திரனால் பொறுக்க முடியாமல் நாரதமகாமுனிவரால் சங்கதியறிந்து, இந்திரன் அங்கஜனை ஏவி, கங்காதரனின் தபசைக் கலைக்கும்படி கட்டளையிட்டனன். அங்கஜன் உடனே தனது தென்றற்றேரில் அமர்ந்து, கரும்புவில்லைக் கரத்திற்றாங்கி, மலர்க்கணைகளை அம்புராத் தூணியிலிட்டு, பெண்கள் சேனையுடன், பசுபதியினிடம் சென்று அவர்மீது மலர்க்கணையைத் தொடுத்தான்.

இதையறிந்த ஈசன் நெற்றிக்கண்ணைத் திறந்து மதனைப் பார்த்தவுடனே மாரனும், அவனது சாரதியும், வாகனமும் தென்றற்றேருடன் எரிந்து சாம்பலாயினர். உடனே அவனுடன் வந்த பெண்கள் புலம்பிக்கொண்டு, இரதிதேவிக்கு தெரிவிக்கப் போகுந்தருவாயில், இரதிதேவியும் தன் நாதன் எரிந்ததாகச் சொற்பனங் கண்டு துக்கித்திருந்தாள். சகல சங்கதியும் உணர்ந்த இரதிதேவி, சிவனிடம் சென்று தனது கணவனை எழுப்பித் தரும்படி வற்புறுத்த, பரமசிவன் மனதிரங்கி, இரதிதேவியின் கண்களுக்கு மாத்திரம் ரூபியாகவும், ஏனையோர் கண்களுக்கு அரூபியாகவும், தோன்றும்படி அநுக்கிரகித்து, மன்மதனை எழுபி ஆசிகூறி, அவளது இல்லறத்திற்கு அனுப்பினார். இதுநிற்க, இப்புதகத்தில் பரமன் திருவிளையாடல்களும், பரந்தாமனின் பெருமைகளும், சிவஸ்தோத்திரப் பாடல்களும், எரிந்தகக்ஷி எரியாதகக்ஷி பாடல்களும், பனிரெண்டு மாதங்களுக்கும் கேள்வி லாவணிகளும், மதனென்பது அன்னம் பதார்த்தம் அறுசுவைகள் உண்ணும் மன்மதன் என்பதையும், இச்சிறியேன் புத்திக்கு எட்டிய வாறு எழுதிய இச்சரித்திர புத்தகத்தை, வித்வசிரோன்மணிகளும், கல்வியில் தேர்ந்த கவிவாணர்களும், இதில் சொற்குற்றம், இசைக்குற்றம் இருந்தபோதிலும், மன்னித்து இச்சிறுவனைக் கண்யப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

V. A. தியாகராஜ செட்டியார்.

குகமயம்

காமதகனம் என்னும்

நூதன பெரிய

நவரத்தின ஒப்பாரி

விநாயகர் துதி

வெண்பா

மதியணிந்த சங்கரனின் மைந்தனெனும் மூஷிகனே
கதியெனவே வுந்தனிட கழல்பணிந்தேன்—தனியெனக்கு
மன்மதனின் தன்சரிதை மாக்ஷியுட னேயெழுத
என்மனதில் குடியிருந்து கார்.

லாவணி

சத்தி உமைமகிழும் சங்கரனின் சுதனே
சந்ததமும் எனக்குத் தானே
தயவுசெய்வாய் கோனே
தாள்பணிந்தேன் யானே
தயைமிகும் சீமானே—இந்த
சின்னஞ் சிறுவன்யானும் மன்மத னின்சரிதை
செப்பவாரும் பூமானே சத்தி

முன்னொரு காலத்திலே முக்கண்ணன் தவம்செய்ய
மாரன் அவர்மேல் கணை தூவி
மாதோர் கோப மாகி
மதனுமவன் ஆவி
மடிந்தானன்று தாவி—பின்னால்

மாக்ஷிமை யுடன்ரதி மண்சுமங் தோணக்கண்டு
மன்னன் உயிரைமீட்டாள் மேவி சத்தி

உம்பர் முனிவர்களும் உத்றம ஞானிகளும்
உயர்வாய் சிவனருளை நாட
உலகில் புகழ் நீட
உத்தமர்கள் பாட
உடனே பாவம் ஓட—வடி
வேலன் கழலேதினம் வேண்டி துதிக்கும் தியாகன்
உளமகிழ்ந்து கவியும் பாட சத்தி

தெய்வ சபை

[சகலரும் வீற்றிருக்கின்றனர்.]

தேவேந்திரன் விருத்தம்

அந்தமாய் உலக மெல்லாம் அன்புடன் செழித்து வாழி
விந்தையாய் தேவர் சித்தர் விணயமாய் நாளும் வாழி
சந்திரன் தனை யணிந்த சங்கரன் அருளி னாலே
எந்தனின் செங்கோல் வாழ எனக்கருள் புரிகு வீரே.

தேவர்கள் துதி

விருத்தம்

தரணியி லுள்ளோ ரெல்லாம் தழைத்துமே வாழ்ந்திருக்க
உரித்தமாய் அரசு செய்யும் உத்தமனை எங்கள்
புரந்திரா உனது பாதம் புகழுடன் யாங்கள் தானும்
தருணமே பணிந்தோமையா தயைசெய்வீர் போற்றி போற்றி.

தேவர்கள் வ-ம்:—இறையவர் வேந்தே! அனைவரும் பணிகின்றோம்.

இந்திரன் வ-ம்:—தேவர்காள்! கல்யாண் அமர்வீர்.

இந்திரன் எழுந்து தேவர்களுக்கு உரைத்தல்

ஒப்பாரி

என்னசெய்வேன் தேவர்களே அன்புள்ள முனிவர்களே
ஏதென யானறியேன் நீதமுள்ள நாரதரே
எம்பிரான் அடிபணியும் எழிலுடைய சித்தர்களே
எவ்வுலகிலும் புகழும் ஏந்தலான ஞானிகளே
எரிகாற் றடிக்கிறது பரிவாய் என் திரேகமெல்லாம்
எந்தனிட லோகமெல்லாம் எரிவதுபோல் காண்கிறதே
யார்செய்த சூதிதுவோ அறிகிலேனே இத்ததியான்
எவராகினு மறிந்தால் எடுத்துரையும் தேவர்களே
எழிலுடனே யான்சென்று அழித்திடுவேன் அத்தவசை
ஏதுமொழி யாமல் இயம்பிடுவீர் சித்தர்களே.

இதுவும் தேவேந்திரன்

லாவணி

சித்தர் முனிவர்களே தேவாதி தேவர்களே
சீக்கிரமாக வுரைப்பீரே
தீ உரைக்கும் சீரே
சிறப்புடனே பாரே
சிவனி னடியாரே
தவத்திற் சிறந்தோரே—என்ன
சேதியோ அறிகிலேன் சூதுசெய்வோர்கள் யாரோ
தெரிந்தாலுரை செய்வீரே சித்தர்

இந்திரன். வ-ம்:—ஹா! தேவாதி தேவர்களே! முனி புங்கவர்களே! சித்தர்களே! பக்தர்களே! சுவாமி நாரதமுனிவரே! அகோரதபம் செய்யும் அருமையுள்ள ரிஷிகளே! அஷ்டதிக்குப் பாலர்களே! நான்மறை யுணர்ந்த மஹான்களே! இதுநாளன்றி இன்று இவ்விடத்தில் இவ்வித சுவாலை வீச காரணமேதோ அறிகிலேன். யாரேனும் பூலோகத்தில் அந்த நீறணிக்கடவுளைக் காணவேண்டி அருந்தவம் புரிகின்றனரோ? அத்தவத்தின் தணலால் என் திரேகம் எரிகின்றது சகிக்கினும் சகிக்கமுடியொணு அக்கினிசுவாலை வீசுகின்றது

ஆதலின் இதின் சவிஸ்தாரத்தை உங்களில் யாராயினுமொருவர் கவனித்து உரைப்பீரென அதிக வினயமுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

[நாரதர் எழுந்திருந்து]

நாரதர் வ-ம்:—இந்திரா!

நாரதர் சொல்லுவது

லாவணி

சுரேந்திரனே பரமன் தக்கனீன்ற மகளாம்
சத்தி உமையை மணம் சூட்டினரே—பின்னல்
மருமகனைகாணவே மாவீர தக்கனவன்
மாக்ஷியாய் சிவலோகம் வந்தான் நேரே—ஐயா சு

வந்த தக்கனிடத்தில் வள்ளல் பரசுபாணி
வார்த்தையொன்றும் பேசா திருந்தாரையா—மனம்
நொந்துமே தக்கனவன் நீலகண்டனுக்காக
நெடிக்குள் யாகம்செய்யத் துணிந்தானையா—ஐயா சு

பின்னுமே ஈஸ்வரியாள் பரிவாய் தந்தையைக்காண
பக்ஷமுடன் கைலையை விட்டுவந்தாள்—அவன்
ஒன்றும் பேசாதிருக்க உமையவள் சரீரத்தை
உடனே கோபமாய் யாகத்தி லெரிந்தாள்—ஐயா சு

சதையை எரிந்தபின்பு தந்த சரீரமுடன்
தனித்து இமாலயத்தில் வந்தாளையா—ஈசன்
அதையறிந்து இமைய மலையில் தபசுசெய்ய
அந்த அக்கினியிங்கு வீசுதையா—ஐயா சு

நாரதர் வ-ம்:—பொன்னகர்க்கிறைவா! சாக்ஷாத் சிவபிரானுக்கு மாமனாராகிய தக்கன் தனது மருமகனைக் காணும் பொருட்டு கைலையை யடைந்தான். அதுசமயம் வந்த தக்கனுக்கு ஈசன் வணங்கவில்லையென்று கடுஞ்சினமுற்று அரனுக்காக யாகசாலையியற்றி யாகம் செய்துக்கொண்டிருந்தான். அத்தருவாயில் உமையவள் தன் தகப்பனைக் காணும் பொருட்டு ஈசனிடம் விடைபெற்று தன் தகப்பனிடம் வந்து

நமஸ்கரிக்கவும் அதற்கு அவன் வந்தமகளை உபசரியாது ஈசனை வாய்க்கு வந்தவாறு தூஷித்தான். அம்மனுக்கு அதிக கோபமுண்டு தனது சரீரத்திலுள்ள மாமிசங்களை அவனுடைய யாகத்தில் உதரிவிட்டு பிறகு தன் சூக்ஷ்ம சரீரத்துடன் இமாலயத்திற்குச் சென்றாள். இதையெல்லாம் உணர்ந்த ஈசன் அந்த இமையமலையில் அருந்தபசு புரிந்துக் கொண்டிருக்கின்றார். அத்தணல்தான் இந்த லோகம் முழுமையும் எரிக்கின்றதேயன்றி வேறல்ல.

தேவேந்திரன் நாரதருக்கு சொல்வது

எண்சீரடி விருத்தம்

நாரத மகாமுனியே நீரும் சொன்ன
நன்மைமிகும் வார்த்தையினா லறிந்துக் கொண்டேன்
கரமதிலே மழுவேந்து மீசன் செய்யும்
கடுந்தபசை யழிக்கவழி ஏதோ சொல்லும்
சிறப்புடனே யானதற்கு தகுந்த மார்க்கம்
செய்துமே தப்பித்துக் கொள்வே னையா
திறமுடனே கரங்குவித்தேன் தருணம் நீரும்
தவமுனியே நாரதரே யுரைசெய் வீரே.

இந்திரன் வ-ம்:—சுவாமி நாரதமுனி சிரேஷ்டரே! தாங்கள் உரைத்த மொழியினால் இதின் ரகசியங்களை யன்குணர்ந்தேன். ஆயினும் அச்சிவனின் அருந்தபசையழித்து யான் தப்பித்துக் கொள்வதற்கு ஏதேனும் ஒருமார்க்க முரைப்பீர் முனிநாதா.

நாரதர் தரு

(பத்தொன்பதாம் நூற்றுக்குமேல் என்றமெட்டு)

கண்ணிகள்

சுரேந்திரபூபதியே சொல்லுவேன் வார்த்தையொன்று
சூதுவாது இல்லாமலின்று—இதற்கு தக்க
சூக்ஷிகள் செய்வதே நன்று சுரே

மகாதேவர் தன்தபசை மன்னரே கலைக்கவென்றால்
மன்மதன் தனையழையுமே—அவனாலே யின்று
மாதபசழிந்து போகுமே சுரே

தபசை யழித்துவிட்டால் சங்கரியை மணம்முடிப்பார்
தற்பரனும் அந்த நேரமே—பின்னாலே வெகு
தாஷ்டீக மாகும் பாருமே சுரே

ஈசனால் ஆறுமுகன் இணையில்லா வேலுடனே
எழிலுடன் அவதரிப்பாரே—சூரபத்மனை
எதிர்த்து உடல் வதைப்பாரே சுரே

இராக்கதர் சேனைகளை இன்பமாய் கருவறுத்து
இந்திரா நம்துயர்தீர்ப்பார்—இன்றுயான் சொன்னேன்
இடரொன்றும் வாராமல் கார்ப்பரர். சுரே

நாரதர் சொல்லுதல்

எண்சீரடி விருத்தம்

இதனுடைய ரகசியத்தை உந்தனுக்கு
இன்பமுடன் எடுத்துரைத்தேன் இந்த்ரரூபா
பதமுடனே ஈசனிட தபசழிக்க
பஞ்சபாணன் தனையே வரவழைத்து
நீதமுடன் மலர்க்கணையை பரமன்மீது
நயமுடனே எய்துதபம் தனைக்கலைத்தால்
இதமுடனே உந்தன்துய ரெல்லாமேகும்
இயம்பினேன் கவனிப்பீர் தேவர்கோனே.

நாரதர் வசனம்:—தேவேந்திரா! இதற்காக நீ யாதொன்றுக்கும் அஞ்சவேண்டாம்; இத்தருவாயில் நீ மன்மதனை அழைத்துவந்து தபசுபுரியும்; ஈசன்மேல் மலர்க்கணையை ஏவச்செய்தால் உடனே அப்பரமன் தபம் கலைந்து இமாலய புத்திரியாகிய ஈஸ்வரியை மணம்புரிந்துக்கொள்வார்; பிறகு அப்பரமனின் அருளினாலே வேலுடன் ஷண்முகன் அவதரிப்பார். அவர்பிறந்ததும், சூரபத்மன், சிங்கமுகாசூரன் முதலான அசுராதிகளை எல்லாம் சம்ஹாரம் செய்துவிட்டு பிறகு நாமெல்லோரும் நன்மையுறும்படி செய்வார்.

இந்திரன் வ-ம்:—நாரதபிரம்மமே! இவ்வேளையில் தாங்கள் தகுந்த ஆலோசனையுரைத்தீர்; அந்த மன்மதனை யானே நேரில் சென்று அழைத்துவந்து பரமனின் தபசை யழித்து விடும்படி செய்கிறேன்.

நாரதர் வ-ம்:—தேவேந்திரா! இதுதான் தக்கயோசனை வேறு யாரையாயினும் அனுப்பினுல் அவன் இங்கு மறுப்பான் ஆதலின் தாங்களே நேரில்சென்று அழைத்துவந்தால் அட்டியின்றி வருவான். அவனுல் உமது காரியம் கட்டாயம் பூர்த்தியாகும். ஆதலால் தேவேந்திரா சீக்கிரமாகச்செல்.

இந்திரன் வ-ம்:—நாரதமுனிவரே தங்களின் அபிப்பிராயப்படியே செய்கின்றேன்.

இந்திரன் தேவர்களுக்குச் சொல்லுதல்

எண்சீரடி விருத்தம்

சீலமுள்ள தேவர்களே யானுமிப்போ
சித்தஜனை அழைத்துவந்து விபரம்சொல்லி
ஆலமுண்டோன் தபசுநிலை யழிக்கச்செய்து
அன்புடன்யான் வரும்வரையில் நீங்களெல்லாம்
கலக்கமுள்ள ராக்கதர்கள் இங்குவந்தால்
கணப்பொழுதில் அன்னவரை தும்சம்செய்து
நலமுடனே ராஜ்ஜியத்தை காத்திருங்கள்
நானுமிதோ மன்மதன்பாற் செல்லுவேனே.

இந்திரன் வ-ம்:—தேவாதி தேவர்களே! யான் சென்று மன்மதனை அழைத்துவந்து அந்த கங்காதரனின் தவநிலையை கலேத்துவரச் செய்கிறேன்; நீங்களெல்லோரும் யான் வரும் வரையிலும் வெகு ஜாக்கிரதையுடனே இருங்கள்; யாரேனும் பகைவர்கள் யுத்தம் புரியவந்தால் .அவர்களை அதாஹதப் படுத்தி புறமுதுகுகாட்டி ஓடும்படி செய்யுங்கள்; யான்சென்று அதிசீக்கிரமாக வருகின்றேன்.

தேவர்கள் வ-ம்:—சுரேந்திரபூபா! தங்களின் அபிப்பிராயப்படியே சென்றுவாருங்கள்.

[இந்திரன் போகிறுன்.]

தாதிகள் மன்மதனின் சயனமாளிகையை அலங்கரித்தல்

ஒப்பாரி

பஞ்சபாணனும் ரதியும் சஞ்சலமிலா துயில
பாங்குடனே தாதியர்கள் இங்கிர்தமாய் அலங்கரிக்க
பொங்கமுடன் கட்டிலொன்று எங்கும்புகழ யியற்றி
புஷ்பசரம் வேணவகை இஷ்டமுடன் தொங்கவிட்டு
பற்பல வாசனைகள் சொற்பமிலாமல் தெளித்து
பதுமையது கட்டில்சுற்றி விதவிதமாய் தானமைத்தார்
பக்ஷமுடன் தீபங்களை அக்ஷணமே ஏற்றிவைத்தார்
பார்ப்பவர்கள் மெச்சும்படி கீர்த்தியுடன் செய்துவைத்தார்
பருவரதி மாரனுக்கும் ஒருத்திஓடி வந்துரைத்தாள்
பரிவாயிதை யுணர்ந்து சரியெனவே வந்தமர்ந்தார்
பூரிப்புடன் இருவருக்கும் கோரியமிட்டாய் வகைகள்
பூந்தியுடன் அதிரசமும் சாந்தமுடன் கொண்டுவந்தார்
பண்புள்ள ஜிலேப்பியுடன் இன்பமுள்ள ஓமப்பொடி
பாதம் அலுவாவும் தோதுடைய காராபூந்தி
பதமுட னின்னுமனேக இதமுள்ள மிட்டாய்தினுசும்
பாங்கியர்கள் கொண்டுவர தீங்கிலா தருந்தியபின்
பொருந்தவே வாசனைசேர் அருமையுரும் தாம்பூலம்
பக்குவமுடன் தரித்து மிக்கவே இருவர்களும்
பாசமுடன் மதன்ரதியும் நேசமுடன் சுகித்திருக்க
பக்கத்தில் தாதியரை மிக்கவே தானழைத்து
பைங்கொடியே தாதியரே செங்கமல சேடியரே
பரமசிவன் மீதினிலே தருணம்ஒரு பாடலது
பாடிடவே வேணுமடி சேடியரே இச்சமயம்
புதுமையுடன் பாடுமென மாதுரதி தானுரைத்தாள்

ரதி சொல்லுதல்

எண்சீரடி விருத்தம்

எந்தனிட தோழியரே பாங்கிமாரே
எழிலுடனே சிவன்மீது கீர்த்தனங்கள்

அந்தமுடன் கேட்டிடவே ஆசையுற்றேன்
ஆகையினல் தாளமேளம் தப்பிடாமல்
சொந்தமுடன் சிவனுடைய பெருமையெல்லாம்
சிறப்புடனே குயிலினத்தின் தொனியைப்போல
இந்தவேளை தனில்நீயும் வாய்திறந்து
இன்பமுடன் பாடிடுவாய் எந்தன்தோழி.

ரதி வ-ம்:—அழகுபொருந்திய தேஜசுமிகுந்த சேடியர்காள்! உங்களில் ஒருவர் ரத்தினமயமான வீணையைமீட்டி சங்கீத சுரங்களைகூட்டி, சாம்பசிவ மூர்த்தியின்மேல் ஒரு கீர்த்தனைபாடி என்மனதை களிக்கச் செய்யுங்கள்.

தாதி வ-ம்:—அம்மணி! அப்படியே தங்களுத்திரவு பிரகாரம் பாடுகின்றோம், நீங்களிருவரும் சந்தோஷமுடன் சப்ரமஞ்சத்தின்மீது சயனித்துக்கொள்ளுங்கள்.

சகிகள் சிவகீர்த்தனை பாடுவது
(தசரதராஜகுமாரா என்ற மெட்டு)

விண்ணவர் முனிவர்தொழும் வேதா
விமலநாதா—வரம்தாதா—வேதாந்தா வி

மண்ணுலக மாந்தர் மகிழும் சங்கரனே
மங்கையுமையவள் மருவும் சிங்காரனே
புண்ணிய கோட்டி என்னும் பொங்காரனே

பத்மநாபனின் மைத்துனனே
பக்தியுடனே—பாலன் யானே—பணிந்தேனே வி

சோமசுந்திர சுகுநேசா
சுப வாச—சத்தி பாசா—சந்திரகாசா சோ

பாம்பை யாபரணமாய் அணிந்திட்ட பரனே
பதமுடன் மான் மழு தரித்திடும் சிவனே
ஏமனை யேஎட்டி யேயுதைத்தவனே

ஏது என்மேல் வாது அரனே
ஏகாக்ஷரனே—ஏழை யானே—எம்பிரானே சோ

சிரித்துபுரமெரித்த தேவா
சிவா வாவா—திரிமூவா—தாள் தாவா சி

சீருற்ற சென்னையில் வாழ்ந்திடும் நேசன்
ஷண்முகனருளினல் கவியுபதேசன்
அருமை கவிவாணருக் கடுமையான் போஜன்
அதிநயகுண தியாகராஜன்
அருள் வாசன்—அன்பர் நேசன்—அரும்பாசன் சி

மன்மதன் சொல்லுதல்

லாவணி

எந்தனின் நாயகியே எழில்மிகுந்த ரதியே
ஏங்குது என்மனது மானே மானே—அந்த
நந்தி நம்பனருளோ நானு மறிகிலேனே
நடுங்குது எந்தனுடல் தேனே தேனே எ

விபரீத மேதோ காணேன் வேஷ்டைக ளாகுதடி [எந்தன்
விதமொன்றும் தோணேன் யானும் மானே மானே—
பாபச்செயலிதுவோ பதருதென் கால்கையெல்லாம்
பாவையே யான்சகியேன் தேனே தேனே எ

மனது நடுங்குதடி மாயேக்கம் கொள்ளுதடி
மங்கையே ஒன்றும்தோணேன் மானே மானே—இன்
தானுகவே என்ஜீவன் துடித்து கலங்குதடி [னும்
தற்பரனின் அருளோ தேனே தேனே எ

கண்ணையிருட்டுதடி கண்மணியே எனது
கருத்தை குலைக்குதடி மானே மானே—என்னை
மண்ணளந்த மாயனும் மனதுவைத்து காப்பாரோ
மாக்ஷிமையா யிவ்வேளை தேனே தேனே எ

இத்தனை நாளில்லாது இன்று இவ்விததுக்கம்
எனக்குவந்ததேனடி மானே மானே—மகா
சித்தர்களின் சாபமோ சேதி யறிகிலேனே
சேயிழையே ரதியே தேனே தேனே எ

சீரும் சிறப்புற்றோங்கும் சென்னை நகரில்வாழும்
　　சிறுவனும் தியாகராஜன் மானே மானே—அவன்
ஜோருடனே புகன்ற செந்தமிழ் கவியதின்
　　சேதியதனைக் கேளும் தேனே தேனே. எ

மன்மதன் வ-ம்:—கண்மணி! என்றுமிலாது இன்று ஏதோ என்மனது கலக்கங்கொள்ளுகின்றது, கால்கைகளெல்லாம் சோருகின்றது, திரேகம் நடுங்குகின்றது, ஆவி துடிக்கின்றது ஏதோ சஞ்சலமாகவும் தோற்றுகின்றது, என் ஆருயிர்க்காதலியாகிய இரதிதேவியே! நான் சற்றுநேரம்வரை சிவபக்திபூண்டு ஜெகதீசனை தியானித்து அவர் திருவிளையாடல்களை புகழ்ந்து துதிக்கின்றேன் மாதே.

இரதிதேவி சொல்லுவது

லாவணி

மனதில் பயமுறுதீர் மன்னவனே எப்போதும்
　　மாயன் அருள்புரிவார் பாருமே பாருமே பாருமே-நல்ல
குணமுடன் நாமிருவர் கலந்து சுகித்திடவே
　　காதலா நீரிவ்வேளை வாருமே வாருமே வாருமே ம

சாரையும் சர்ப்பம்போல சருவி இருவருமே
　　சந்தோஷமாயிருக்க நேரமே நேரமே நேரமே—இந்த
நேரந்தடையுராது நேரிழையா ளெந்தனை
　　நீரும்சுகித்து சுகம்தாருமே தாருமே தாருமே ம

காமக்கடலில் நாமும் நேமமுட னிருக்க
　　தாமதம் செய்யவேண்டாம் ராஜனே ராஜனே ராஜனே—
நேமமுட னிருவர் நாடியிவ் வேளைதனில் [வெகு
　　நாமுமிருப்போ மெந்தன் நேசனே நேசனே நேசனே ம

சித்திரக் கட்டிலின்மேல் சீருடன் நாமிருவர்
　　சிரித்து விளையாடிட காலமே காலமே காலமே—கவி
நித்தம்புகலும் தியாக ராஜனும் லாவணியாய்
　　நேமித்தான் இன்னுமென்ன ஜாலமே ஜாலமே ஜாலமே.

இரதி வ-ம்:—பிராணகாதலா! தாங்களென்ன இவ்வித நூதனமாய் புகலுகின்றீரே? பூவுலகோர் நம்மிருவரையும்

மதனரதியெனவும் சுகபோக சதிபதியெனவும் புகழ்ந்துரைக் கையில் நமக்கு வேறு சஞ்சலமேது துன்பமேது ஆதலால் பிராணபதி தாங்கள் தடைபுரியாது இவ்வேளை சப்ரமஞ்சத் தின்மீது வந்து அமர்ந்து சுகமாக சிறிதுநேரம் காமக்கடலில் ஆழ்த்தி சுகித்திருக்கலாம் வாரும் நாதா.

மன்மதன் விருத்தம்

பொங்கர வணிந்த ஈசா புனிதனே போற்றி போற்றி
மங்கைபார் வதிசமேதா மான்மழு தரித்தாய்போற்றி
சங்கடம் தீர்க்க இந்த தருணமே வருவாய் போற்றி
அங்கஜன் யானுமிப்போ அணுகினேன் போற்றி போற்றி.

மன்மதன் சிவபஜனை புரிவது

(பாராமுகமேனையா என்றமெட்டு)

பல்லவி

சாமிசிவ சங்கரா சதுர்மறைதுதிக்கும் — சா

அநுபல்லவி

பாம்பணி ஈசனே பார்வதி நேசனே—தினம்
பக்தர்கள் தொழும் நேசா

பிரகாசா—விசுவாசா—பவநாசா—சிறு
பாலனைக்காரிப் போது
பரதவிக்கின்றேன் புவிமீது

பரிவாய் எதிரில் விரைவாய் வரவே
பணிந்தேன்—மனங்—கனிந்தேன்—சிரங்
குனிந்தேன்—பாதம்—அணிந்தேன்—காரும் — சா

சரணம்

பாவாணர் நேசன் பகர்சென்னை வாசன்
படிமிசைத் தியாகராஜன்

அருள்போஜன்—கவியீசன்—அதிநேசன்—அவன்

பகர்ந்த செந்தமிழ் பாடி—உனை
அனுதினமும் கொண்டாடி
ஆசித்து பூசித்து நேசித்து வாசித்தேன்
பாரும்—அருள் தாரும்—எனைநீரும்—பாதுகாரும்—ஐயா சா

மன்மதன் மஹாவிஷ்ணுவை துதிப்பது

விருத்தம்

தேவரின் துயரைத் தீர்க்க திறமுடன் பூமி தன்னில்
மேவியே அவதரித்த மாயவா உனது பாதம்
தாவியே துதித்து யானும் தயங்குறேன் உனது மைந்தன்
கோபியா திந்த வேளை குறைதனை தீர்ப்பாய் போற்றி.

மன்மதன் தரு

(கத்துகடலொத்துகடை என்றமெட்டு)

மாதவனே உன் மகிமை யானே—வெகு
மாக்ஷிமையுடனே உரைப்பேனே—இந்த
மண்ணுலகில் உன்னதமாய் நன்னயமுடன் வந்த சீ
மானே—கேளும்—கோனே

மச்சரூப மாகவே நீர் அன்று—பொல்லா
லஜ்ஜை செய்த சோமுகனை வென்று—வந்த
அச்சுதனே பச்சைநிற மான எந்தன் ஆண்டவனே
இன்று—காரும்—நன்று மா

கூர்மாவதாரம் செய்த கோலா—நல்ல
சீர்மிகும் வானவர்க்கனு கூலா—அன்று
நேர்மையுடனே அமிர்தம் தோணவே பகர்ந்த ஆதி
மூலா—கோ—பாலா மா

இரண்யாக்ஷதனை நீயும் கொல்ல—பாரில்
வராகமாய் சென்றாய் கடல் உள்ளே—அண்ட
சராசரம் தானதிர சண்டாளனை மார்பிளந்தாய்
மெள்ள—யாரும்—சொல்ல மா

பரமனின் மைத்துனனே மாலே—நல்ல
நரசிங்க ரூப பெருமாளே—உனை
சரணம் செய்திட்ட சிறு பாலகனைக் கார்த்தாய் அந்த
வேளை—பக்தி—யாலே மா

வாமனரூப முடனே சென்றாய்—நீரும்
நேமமுடன் தானங் கேட்டு நின்றாய்—அன்று
தாமதமில் லாமலந்த மாபலிபா தாளம்போக
கொன்றாய்—அங்கே—நின்றாய் மா

பெற்றதாயை கொன்றவனே ஐயா—வித்தை
கற்றதோர் பரசுராமா மெய்யா—உடனே
தெற்றெனவே கார்த்தவீரி யார்ஜுனனை கொன்றாய்சக்ர
கையா—காரும்—துய்யா மா

தசரத ராஜனீன்ற ராமா—துஷ்ட
அசுரரை கருவறுத்த பூமா—பாழும்
தசமுகனை கொன்று சீதை விசன்மது தன்னைதீர்த்த
சீமா—வாரும்—சோமா மா

கைதனில் கலப்பைபூண்ட தீரா—இந்த
வையகமெல்லாம் புகழ் கெம்பீரா—அன்று
மெய்யுடனே துய்ய பல ராமனாக வந்த உப
காரா—அதி—வீரா மா

தேவகியின் புத்திரனே கண்ணா—அந்த
பாவி பூதகியைக்கொன்ற வண்ணா—பின்னும்
தாவியந்த பாவிகம்சன் மேவிஉயிர் சாகசெய்த
மன்னா—புகழ்—துன்னா மா

பாஞ்சாலிக் கருள்புரிந்த மாயா—இன்னும்
வஞ்சமேனோ எந்தன்மீது தூயா—வெகு
நேசமிக வேநிறைந்த தாசர்களை ஆதரித்த
நேயா—கனி—வாயா மா

சென்னை மாநகர்தனிலே வாசன்—வெகு
சொன்னய மிகுந்திலகும் நேசன்—மிக

கண்ணிய முடனேகவி நண்ணியே படித்தான் தியாக
ராஜன்—அருள்—போஜன் மா

மன்மதன் விருத்தம்

அரி ஹரி கேசவா அகலிகையின் சாபமதை
அகற்றியே வைத்த தேவா
கரியென்ற யானையை காத்தன்று ரக்ஷித்த
கனமான என் தகப்பா
பரிவாக துருவனெனும் பாலனைக் காத்திட்ட
பண்பான புருஷோத்தமா
அறிகிலேன் யானென்றும் ஆயனே இச்சமயம்
ஆதரிப்பாய் முகுந்தனே.

இந்திரன் பிரவேசம்

மன்மதன் இந்திரனைக்கண்டு திடுக்கிட்டெழுந்திருந்து சொல்லுதல்

லாவணி

வாரும் வாரும் வாரும் வந்தீரிது சமயம்
வானவர்க்கதிபா உட்காரும் நீரும்—இங்கே
வந்ததை யானும் கண்டு அந்தமுடன் மகிழ்ந்தேன்
வார்த்தை ஏதேனு முண்டோ கூறும் கூறும் வா

அடியேனைத் தேடிவந்த காரணங்களு மென்ன
அறிவிப்பீர் தேவர்களின் கோனே கோனே-அதை
அறியவே யிப்பொழுது அமரர் சேனபதியே
ஆவலதிகம் கொண்டேன் யானே யானே வா

தேவர்களுக் கிசைந்த தேவேந்த்ர பூபதியே
தேவா முகம்வாடிய தேது ஏது—நீரும்
தீவிரமா யிப்போது மேவியெந்த னிடத்தில்
தாமத மில்லாது நீரோது ஓது வா

உன்மனதின் குறையை எந்தனிட முரைத்தால்
உபகாரம் தக்கவாறு இன்னே இன்னே—அந்த
உத்தமன் தியாகராஜன் சொன்ன கவியைப்பாடி
உண்மையுடனே செய்வேன் சொன்னேன் சொன்னேன்

மன்மதன் வ-ம்:—வாரும் இமையவர்க் கதிபதியாகிய தேவேந்திரா! தாங்கள் இதுநாளன்றி இன்று இவ்வித கிரமத்துடனும் முகமலர்ச்சியுடனும் அடியேனைத் தேடிவந்த காரணமேதோ, தாங்கள் யாரிடமாவது வருமாறு சொல்லியனுப்பினால் அச்சமயமே வரமாட்டேனோ தாங்கள் ஏன் இவ்வித கஷ்டமுடன் வரவேண்டும் இந்திரபூபா.

இந்திரன் விருத்தம்

பத்தவதாரம் செய்த பரந்தாமன் சுதனுமான
சித்தஜா உன்னைக்காண திறமுட னிங்குவந்தேன்
இத்ததி உன்னைக்கண்டேன் இனிதுடன் மனமகிழ்ந்தேன்
பத்தினி ரதியினோடு பலநாளும் வாழிவாழி.

இந்திரன் வ-ம்:—எனது அன்புள்ள பஞ்சபாணனெனும் பெயர்பொருந்திய மாரவேளே! அச்சுதனின் புத்திரனாகிய அங்கஜனே! யான் இன்று உன் முகதரிசனம்காண வெகு ஆவலுடன் வந்தேன் உன்னையும் கண்டேன் அதனால் அளவிலா ஆனந்தம் கொண்டேன் ஆயினும் நீ உனது மாதுடன் சுகபோகமாக வாழக்கடவது.

மன்மதன் விருத்தம்

சித்தரும் முனிவர்கட்கும் தேவாதி தேவர்கட்கும்
பத்தியே புரிந்தோருக்கும் பகவானின் அடியாருக்கும்
நித்தமும் நன்மைசெய்யும் நாதனே இந்த்ரபூபா
சுத்தனுன் னருளினாலே சுகமுட னிருக்கின்றேனே.

மன்மதன் வ-ம்:-தேவர்கட்கும் ரிஷிகளுக்கும் முனிவர்களுக்கும் எனக்கும் ஆதாரமாகிய அமரர்கோனே! உனது கிருபையாலும், உம்பர்பிரானின் ஆசீர்வாதத்தினாலும், எனது பிதாவாகிய ஆலிலைமேல் பள்ளிகொண்ட ஆதிநாராயணரின்

அருளினாலும் அடியேன் மிகவும் சுகக்ஷேமமாகவே இருக்கின்றேன் புரந்தரா.

இந்திரன் வ-ம்:—மன்மதா! மிகவும் சந்தோஷம்.

மன்மதன் வ-ம்:—ஆயினும் தங்களை ஒரு மனுவு கேட்க ஆவலுற்று இருக்கின்றேன்.

இந்திரன் வ-ம்:—அது என்ன மனுவு அங்கஜா.

மன்மதன் வ-ம்:—சுரேந்திரபூபதியே! தங்களின் ராஜ்யத்திலிருக்கும்

மன்மதன் சொல்லுதல்

லாவணி

சித்த வித்யாதரரும் தேவாதி தேவர்களும்
க்ஷேமந்தானா எனக்கு சொல்லுவீரே-பரி
சுத்தமுள்ள பக்தரும் வாயுவுடன் வருணன்
சுகந்தானா எந்தனுக்கு புகல்வீரே-ஐயா சி

இந்திரன் சொல்லுதல்

ஷை லாவணி

சித்த வித்யாதரரும் தேவாதி தேவருடன்
தினமும் சுகமாகவே வாழ்கின்றாரே-இன்னும்
சுத்த பக்தருடனே வருணன் வாயுபகவான்
சுகமுடனே தினமும் வாழ்கின்றாரே-ஐயா சி

மன்மதன் சொல்லுதல்

ஷை லாவணி

இமையவர்களுக்கு மென்னாளு மிடரிலாது
என்றும் காப்பாற்றும் சுரேந்திரனே-இப்போ
இவ்வடியேனைத்தேடி வந்ததோர் காரணத்தை
எனக்கறிய உரையும் இந்திரனே-ஐயா இ

இந்திரன் சொல்லுதல்

ஷை லாவணி

அங்கஜா உந்தனாலே அவசிய மோர்காரியம்
அட்டியின்றி நடக்க வேணுமையா-நீரும்

அன்புடன் எந்தனுக்கு அவ்வுபகாரம் செய்தால்
ஆயுளுள்ள மட்டும் மறவேனையா-ஐயா அ

மன்மதன் சொல்லுதல்

ஷை லாவணி

அடியேனாலே நடக்கும் படியான காரியங்கள்
அமரர்க் கதிபதியே நீருரைத்தால்-யான்
அந்த காரியந்தனை சொந்தமுட னிப்போதே
அஞ்சாமல் செய்துவாரேன் பாருமையா-ஐயா அ

இந்திரன் சொல்லுதல்

ஷை லாவணி

என்சொல்லை மீறிடாத ஏந்தல் அங்கஜவேளே
எந்தன் சஞ்சலமெல்லாம் தீர்ந்ததையா-முன்னே
ஏழுலகையளந்த எம்பெருமான் சுதனே
எடுத்துரைப்பேன் உனக்கு பாருமையா-ஐயா எ

இந்திரன் சொல்லுதல்

எண்சீரடி விருத்தம்

மன்மதனே கேளுமையா மொழிவே னென்று
மகத்தான முக்கண்ணன் மலைச்சார் தன்னில்
தன்மையுடன் தபசுநிலை புரிவ தாலே
தணலாக உலகமெல்லாம் சுவாலை வீசி
என்னுடைய லோகமெல்லாம் தணலாய் பற்றி
எரிவதால் அங்கஜனே நீயும் சென்று
பின்னமது அவர்தபசை செய்து என்னை
பாதுகாத் தெனக்கு அருள் புரிகுவாயே.

இந்திரன் வ-ம்:—ஐயா குமாரவேளே! பரமன் இமைய மலைச்சாரலில் நித்யானந்த பக்தி வைராக்கியமாய் தபஞ்செய் துக்கொண்டிருக்கிறார்; அத்தவநிலையின் சுவாலை தேவலோக முழுதிலும் தணலாய் எரிக்கின்றது. எங்களால் சகிக்கமுடிய வில்லை; ஆதலால் உனது சமுகமடைந்தேன்; எனது குறையை தவிர்க்கவேண்டியது உன் கடமை அதாவது அருந்தவம் புரியும் அம்மகாதேவரின்மீது மலர்கணையெய்து அத் தபசை

குலைத்து வருவீரென்று உனது திருவருளைப் பிரார்த்திக்கின்றேன்.

மன்மதன் வ-ம்:—ஹா அப்படியா! "ஆய்ந்தோய்ந்து பாராதவன் தான் சாகக்கடவன்" என்னும் பழமொழிபோல் முன்பின் கவனியாது உறுதிவாக்களித்து விட்டேனே ஹா! ஜோதிமயமே! யான் உமக்கு அடியேனாயிருந்தும் உன்னை துரோகம்புரிந்த பாவியானேனே! இதற்கு என்னசெய்வது சுரேந்திரா! என்ன தெரிவித்தீர் பரமனின் தபசையா யழிப்பது ஆஹா பேஷ் நன்றாயிருக்கின்றது நாம் சிவனடியார்களாயிருந்தும் சிவத்துரோகம் புரியலாகுமா.

தேவேந்திரன் விருத்தம்

இதற்குநீ அஞ்சலாமோ ஈடில்லா கருப்புவில்லி
எதற்கும் வல்லவன் தானென்று எங்குமேபெயர் பெற்றோங்க
சதமென உன்னையானும் தஞ்சமே யடைந்திருக்க
மதனனே இந்தவேளை மகிழ்வுடன் ரக்ஷிப்பாயே.

இந்திரன் வ-ம்:—அங்கஜா! நீநினைத்த காரியமும் நடவாதிருக்குமா? இதற்கு நீ தியங்குவானேன் அதுவுமன்றி சொல்பிசகாத சித்தஜனெனபெயர் பெற்றிருக்க அப்பெயரை அழித்துக்கொள்ளலாமா? ஆதலால் உனக்கு என்ன ஆபத்துநேரிடப் போகிறது ஒன்றுமஞ்சாதே நீ இச்சமயம் ஈசனிடமணுகி அவர் தவனிலையை உன் மலர்கணைக்கு இரையாக்கி அவர் மனதை கெடுத்து எனது வருத்த மகற்றிவிட்டு உன் இருப்பிடம்வந்து சுகபோகமுடன் ரதிமதனனென பெயர்விளங்கும் படி வாழ்ந்திருப்பாய் என் குறையைத் தீர்த்தால், இந்நன்றி என்றும் மறவேன். ஆதலால் இவ்வடியேன்மீது கிருபை கூர்ந்து கட்டாயம் செல்லவேண்டியது உன் கடமையே; மன்மதா யான் சென்று வருகிறேன்.

மன்மதன் சொல்லுவது

விருத்தம்

புரந்திரா உந்தன்சொற்போல் பரிவுடன்யானேசென்று
நரஹரி என்தகப்பன் நாரணன் அருளினாலே

கரமதில் மானைஏந்தும் கர்த்தனின் தபஸையானும்
அரைநொடி தனிலழிப்பேன் அமரனே அஞ்சிடாதே.

மன்மதன் வ-ம்:—இமையவர் வேந்தே! உனதடியேனு கிய யான் சொன்னசொல் பிசகுவேனெனக் கிஞ்சிற்றேனும் நினையாதீர் யான் உமது வார்த்தைப்படியே இமையமலைச்சார லில் சென்று அப்பரமமூர்த்தியின் தபநிலையை கலைக்கும் பொருட்டு என் மலர்கணையைஏவி ஒரு நொடிக்குள் கலைக்கும் பொருட்டு என் மலர்கணையை ஏவி ஒருநொடிக்குள் கலைக்கா விடில் என்பேர் மன்மதனு; ஆனல் இனி இச்சரீரத்துடன் என் ராஜ்யத்திற்கு யான்வருவது அரிதுதான் என்னசெய்வது வரும்விதியை விலக்கமுடியுமா, ஆயினும் வருந்துவதில் யாது பயன்! இந்திரா? யான் தங்களுக்கு உறுதிமொழி ஈய்ந்து உம்மை துரோகிப்பேனென கிஞ்சிற்றேனும் நினையாதீர் தாங்கள் சென்று வாருங்கள்.

[இந்திரன் போகிறுன்]

மன்மதன் விசனப்படல்

லாவணி

புரந்திரன் சொல்லைக்கேட்டு பரமன் தபசழிக்க
பகர்ந்தேன் உறுதிமொழி யானே
பாவியென் செய்வேனே
பரதவிக்க லானேன்
பஞ்சபாணன் யானே—முன்னே
பழியது என்செய்தேனே படமுடியாத்துயரம்
பட்டுவருந்து றேனே 4

இமையவர் வேந்தனுலே ஈசா உனைபகைக்க
இவ்விதி நேர்ந்ததுகாண் அரனே
இனியென் செய்வேன் பரனே
இசைந்த சூலக்கரனே
இதுவும் சுரேந்திரனே—செய்தான்
இந்த ஏழையின்மீது ஒன்றும் பிழைகளில்லை
இத்ததிகாரும் சிவனே 4

மன்மதன் வ-ம்:—ஹா! என்னமோசம் போனேன் பார்த்தனையா தீரவிசாரியாது இந்திரன் வார்த்தையைக் கொஞ்சமேனும் ஆலோசியாமல் அவனிஷ்டப்படியே வாக்கு தத்தம் செய்துக்கொடுத்தேனே ஹா! சர்வேஸ்வரா.

மன்மதன் தரு

(நடந்ததென்ன சொல்லம்மா என்ற மெட்டு)

பல்லவி

என் தலைவிதிதானோ—அல்லால்
எவர்செய்த சதிதானோ ஏதுமறிகிலேன் என

அநுபல்லவி

ஏற்று வாகனனேயுன் அடியேனும் யானே
இடர்செய்ய மனமது இசைந்து நின்றேனே
சொற்புத்தி கேட்டுயான் சூதுக்குள் ளானேன்
சூலபாணீ உனை துரோகம் செய்தேனே

சரணம்

வந்த இந்திரன் முன்பு உரைத்ததாலே யானும்
வள்ளலே யானதை கேட்டிடேன் காணும்
தொந்திரவு வைத்து சென்றதால் யானும்
துன்ப முறுகிறேன் நீ வரவேணும் என

பக்தரை கார்த்திடும் பார்வதி நேசா
பார்த்தருள் கடைக்கண்ணால் பவனி வுல்லாசா
திக்கில்லா எந்தனை தேற்றுவாய் ஈசா
சிறுவனும் தியாகனை காரும் பிரகாசா. என

இதுவும் மன்மதன் தரு

(இராகம்-தேசிகதோடி-தாளம்-ஆதி)

பல்லவி

ஓடிவா ஓங்காரா ஓ

அநுபல்லவி

ஒய்யாரமுடன் அய்யா சிவனே ஓ

சரணம்

ஆடியபொற் பாதம் தாராய்
அடியேனென் குறையை தீராய்
நாடினேன் நறுமலரால் மாலே
சூடினேன் சுந்தரனே நீரிங்கு ஓ

தொகையறு

பருவதராஜனின் தவத்தினுல் உதித்திட்ட
பாவை பார்வதியின் லோலா
கெருவமே படைத்திட்ட காலனே அன்று உன்
காலால் உதைத்த மூலா

(பாட்டுத் தொடர்)

அத்திமுகன் தன்னை ஈன்ருய்
அடியார்க்கு பொருளாய் நின்ருய்
சத்திவடி வேலன் பாதம்
நத்திடும் தியாகனின் கீதம் ஓ

மன்மதன் வ-ம்:—ஹா! பராபரமே! என்ன செய்வேன் அப்பாவி சுரேந்திரன் என்னை கவுத்தகம்புரிந்து என்னிடத்தில் வாக்குதத்தம் வாங்கிக்கொண்டு பின்னுல் அரன் செய்யும் அகோர தவநிலையை கெடுக்கும்படி மொழிந்தானே; யான் முன் பின்னறியாமல் உறுதிமொழி ஈந்து அத்தீச்செய்கைக்கு சம்மதித்தேனே; இதற்கென்ன செய்வது? எல்லாம்வல்ல இறைவனுக்கே இடர்புரியும் பாவியானேனே.

மன்மதன் சிவனை தோத்திரம் புரிவது

(மன்றுள்ளாடியவா ஈசா என்றமெட்டு)

பல்லவி

காரும் சங்கரனே-எனைக்-காரும் சங்கரனே-திவ்ய

அநுபல்லவி

கரமதிலே மான்மழுவை திரமாய்பூண்ட சிற்பரனே கா

சரணம்

காலவித்யாசமோ காண்கிலேன்ஈசனே
கதருகிறேன்யானும் கண்பாரும்நேசனே
ஜாலமின்னுமேனோ சந்திரகாசனே
ஜங்கமர்முனிவர்கள் உனையே சந்ததம் தொழுதிடும்சிவனே கா

துரோகியாமிந்திரன் சூதுபுரிந்தானே
தனையனதையுணராமல் வாக்கீய்ந்தேனே
அரோகரா உன்தபம் அழித்திடச் சொன்னானே
அடியேன்யான்னென்செய்வேன் ஐயா அரவாபரணனே கா

சத்துசித்தானந்த சாமியேஉன்பாதம்
சரணமென பணிந்தேனேயானும்நிதம்
இத்ததிளந்தனுக்கருள் வரப்ரசாதம்
ஈடற்ற உந்தனின்பெருமை இயம்பிடவே வெகுநீதம் கா

அண்டினேனுந்தனை அன்பனும்யானையா
அடியேன்மீதுந்தனுக் காவேசம்ஏனையா
தொண்டன்தியாகராஜன் கவியிதுதானையா
துதியதுதினம்புரிந்துனையே கதியெனகழலடிதொழுதேன் கா

மன்மதன் வ-ம்:—ஆ! என்னமதி பார்த்தனையா! சரி இதைப்பற்றி எவ்வளவு வருந்தியபோதும் யாதுபயன் வரும் விதிவரில் படும் கதிபட்டே தீரவேண்டும் என முதியோர் உரைத்த வாசகம் பொய்க்குமா என்னசெய்வது இந்திரனுக்கு சம்மத வாக்கீய்ந்து பின்னால் பிரளலாகுமா; ஆதலால் என் ஜடமழிந்த போதிலும் சொன்னசொல் தவறேன் ஆயினும் நாம் சுயபுத்தியாக அப்பரமமூர்த்திக்கு யாதொரு யிடரும் நினைக்கவில்லை ஆதலால் நம்முடைய மலர்கணையை அவர்மீது ஏவி அவரின் தரிசனமாவது கண்டு வரலாம்.

மலரணையில் சயனித்திருந்த

இரதிதேவி திடுக்கிட்டெழுந்திருந்து சொல்லுதல்

லாவணி

ஏகவேண்டாம்கணவா இந்திரன்சொல்லைக்கேட்டு
ஏகாக்ஷரனிடத்தில் இப்பொழுது—நாதா
தோகை எந்தனுடைய சொல்லதை மீறிச்சென்றால்
துன்பங்கள் நேர்ந்துவிடும் சொன்னேன் மாது-நாதா ஏ

பகையாளி குடிதனை உறவாடி கெடுப்பார்போல்
பகர்ந்தான்கா ணிந்த மொழி கேட்டிடாதீர்-அந்த
பகவான் பரமசிவன் பகையோ நமக்கு சொல்லும்
பாவை என் வார்த்தைதனை தட்டிடாதீர்—ஐயா ஏ

ஏற்றுவாகனன்மீது ஏவினுள் மலர்க்கணை
எரித்திடுவா ருந்தனை சாம்பலாக—அதை
சாற்றினே னுந்தனுக்கு சொல்மீறி போகவேண்டாம்
சந்திரகாசன் பகை யாவா ரையா ஏ

மன்மதன் வ-ம்:—பிராணகாதலி! என்ன நித்திரை செய்திருந்த நீ ஏதோ நினைவு தடுமாறி சொர்ப்பனம் கண்டவள் போல் வாய்பிதற்றுகின்றாயே காரணமென்ன கண்மணி.

இரதி வ.-ம்:—நாதா! யான் அலண்டு நித்திரைசெய்யும் சமயம் சுரேந்திரபூபதியாகிய இந்திரன் இங்ஙனம்வந்து என் பிதாவாகிய சாக்ஷாத் சந்திரசேகரன் செய்யும் தபநிலையை அழிக்க உம்மை அழைத்ததாகவும் அம்மொழிக்கு தாங்கள் இணங்கி அரன் முன்னேசென்று மலர்கணையை ஏவினதாகவும் அதற்கு ஈசன் தன் நெற்றிக்கண்ணினால் உம்மை எரித்து சாம்பலாக்கினதாகவும் சொர்ப்பனம் கண்டேன். ஆதலால் அப்பாவியாகிய இந்திரனின் வார்த்தையைக்கேட்டுப் போக வேண்டாம் நாதா.

மன்மதன் சொல்வது

லாவணி

ஆனல்கேளும் ரதியே அன்புள்ள ஆரணங்கே
அஞ்சிடவேண்டாம்நீயும் சொன்னேன் சொன்னேன்-இப்
வீணகவே புலம்பி வருந்திட வேண்டாமடி [போ
வர்ணமயிலினமே கண்ணே கண்ணே அ

இரதி சொல்லுதல்

லாவணி

எவ்விடமும் நிறைந்த ஏந்தல் பரசுபாணி
என்ன குறைகள் செய்தார் நாதா நாதா—மிக
ஒவ்வியமாக தினம் வேண்டியே சங்கரனை
ஓதியிருப்போம் நாமும் நீதா நீதா எ

மன்மதன் சொல்லுதல்

எண்சீரடி விருத்தம்

ஆரணங்கே மெய்ரதியே சொல்வே னென்று
அன்புடனே கேளுமடி இமையவர்க்கு
அரசனெனும் புரந்திரனும் இங்கேவந்து
அலரியே என்னைமிக வேண்டிக்கொண்டான்
அரனுடைய தபசையென்னை அழிக்கச்சொல்லி
அறிவித்தான் அதற்குயான் ஒப்புக்கொண்டேன்
ஆரவாரமாக சென்று அழித்துவாரேன்
அன்னமே ஒன்றுக்கும் அஞ்சிடாதே.

மன்மதன் வ-ம்:—கண்மணி! யாதொன்றுக்கும் அஞ்சாது எனக்கு விடைஈய்ந்து நீ ரத்னமயமான மஞ்சத்தின் மீது சயனித்திரு; யான்சென்று அப்பரமனின் தவத்தைக் குலைத்து அதிசீக்கிரத்தில் வருகிறேன்.

இரதி சொல்லுதல்

லாவணி

(இந்தாவொருசேதி என்ற மெட்டு)

போகாதீர் நாதா
போகாதீர் நாதா—இந்த
பூவையை விட்டு போதா

அரன்தபசை யழிக்க ஆகாது பாரும்
அத்துமீறி சென்றால் அருகினில் நீரும்
பரசுபாணி உந்தனை பஸ்மிக்க நேரும்
பின்னால் எனக்குதுணை யாருண்டு கூறும் போ

மன்மதன் சொல்லுதல்

ஷை லாவணி

மாதே மறுக்காதே
மாதே மறுக்காதே—அடி
மங்கையே எந்தன் கோதே

எரித்திடாரடி என்னை இளங்கொடி மானே
எய்குவேன் மலர்கணை யானும் செந்தேனே
பரிவுடன் இமையவர் வேந்தற்கு யானே
புகன்ற வாக்குதத்தம் போல் புறப்படு வேனே. மா

இரதி சொல்லுதல்

ஷை லாவணி

பிஞ்ஞ்கரிடம் நீரும் போனால் பிராணேசா
பார்க்கப்போவதில்லை யான் உந்தனை ராஜா
பஞ்சபாணரே செல்லவேண்டா முல்லாசா
பைங்கொடி வார்த்தைதனை கேளும் விஸ்வாசா போ

மன்மதன் சொல்லுதல்

ஷை லாவணி

மாதே தூங்கி முழிப்பதற்கு முன்னாலே
மங்கை பாகனின் தபம்அழிப்பேன் கண்ணாளே

வாதே புரிந்திடாது அனுப்பு மின்னாளே
வகையுடன் சீக்கிரத்தில் வருவேன் பெண்ணாளே மா

இரதி சொல்லுதல்

ஷை லாவணி

காதலரே நீரும் கரும்பு வில்லெடுத்து
காலகாலனின் மீது கனிவுடன் விடுத்து
சாதகமாய் எரிந்தால் நான்யாரை டுத்து
தங்கி பிழைப்பேன்நாதா உரைத்திடீரெடுத்து போ

மன்மதன் சொல்லுதல்

ஷை லாவணி

எந்தன் மலர்கணைக்கு எதிருமுண் டோடி
இதையறியாது சொல்ல வந்தாய் நீபோடி
சந்ததம் தியாகராஜன் சொல் கவிபாடி
சந்தோஷமாய் வருவேன் விடைஈவாயோடி எ

இரதி சொல்லுதல்

எண்சீரடி விருத்தம்

மாது எந்தன் சொல்லைப்போல் பிராணநாதா
மனதை நிலைநிறுத்தி நீர்போகா விட்டால்
தோதுடனே நாமிருவர் புவியின் மீது
சுகமாக எப்போதும் வாழ்ந்திருப்போம்
வாதுநீர் ஈசனிடம் புரிந்தீரானால்
வையகத்தில் பரமனால் பஞ்ச பாணன்
கோதுடனே எரிந்தானென் றேசு வார்கள்
கோதையான் அறிவித்தேன் கவனிப் பீரே.

மன்மதன் சொல்லுதல்

லாவணி

உறுதியு மொழியுமீய்ந்து உந்தனின் சொல்லைக்கேட்டு
வீட்டோடிருப்பதுவும் நீதியா நீதியா நீதியா—எந்தன்

பருவரதியே மானே புரந்திரன் தானறிந்தால்
பலவாறு ஏசிடுவான் கியாதியா கியாதியா கியாதியா உ

இரதி சொல்லுதல்

ஷெ லாவணி

வீணாக பேச்சைத்தள்ளி விருதாவிலே மடிய
வேளை வந்ததுனக்கு நாயகா நாயகா நாயகா—நல்ல
கோண மனதுடைய கர்த்தனும் கண்திறந்தால்
குபீரென நீயெரிவாய் தாயகா தாயகா தாயகா வீ

மன்மதன் சொல்லுவது

ஷெ லாவணி

நாரணன் மைந்தனென்று நந்திநம்ப னறிவார்
நாயகி அஞ்சிடாதே கண்மணி கண்மணி கண்மணி—மன
பூரணமாகநீயும் போக சிலவுதாடி
பார்வதியின் மகளே பெண்மணி பெண்மணி பெண்மணி உ

இரதிதேவி தன்னைவிட்டகலாததற்கு அனுபவம் கூறல்

ஒப்பாரி

மங்கை சொல்வேன் கேளுமையா—என்
அங்கஜவேள் சிங்காரா
மலரை விடுமோ மணமும்—துஷ்ட
எலியை விடுமோ பூனை
மணமும் விடுமோ புனுகு—கொல்லை
தினையை விடுமோ கிளிகள்
மண்ணை விடுமோ புழுவு—பெரு
புண்ணை விடுமோ வுதிரம்
மனதை விடுமோ புத்தி—பாழும்
பணத்தை விடுமோ ஆசை
மன்னர் விடுவாரோ நீதி—பசும்
பொன்னை விடுமோ நிறமும்

மரத்தை விடுமோ நிழலும்—சொந்த
வரன் பிரிவானே மாதை
மீசை விடுமோ முகத்தை—அந்த
பசுவு விடுமோ கன்றை
மருளை விடுமோ பூசை—நம்
சிரசை விடுமோ விதியும்
மதுவை விடுமோ ஈக்கள்—அந்த
உமையை விடுவாரோ சிவன்
மன்னவரே இப்பொழுது—என்னை
இந்நகரில் விட்டு நீரும்
மருத்துவன் மகவான் பால்—நீர்
உரித்த முடன் போனீரானல்
மண்ணி லிருக்கேனையா—இதை
திண்ண முடனே அறிவீர்
மாது என் வார்த்தை தள்ளி—சுக
நாதனே போகா தீர்
மனதுபோல் நீரிருந்தால்—நாம்
குணமுடனே வாழ்ந் திடலாம்
மகிமையது ஈசனிடம்—அவர்
மருத்துவங்கள் வேண துண்டு.

இரதி சொல்லுதல்

எண்சீரடி விருத்தம்

நந்தி நம்பன் தபசுதனை அழிக்கப்போமோ
நாரிபாகன் தன்னையே எதிர்க்க லாமோ
அந்திவண்ணன் அவர் ஞான மூர்த்தியல்லோ
அமரர்களும் அசுரர்களும் பணியும் நாதன்
சந்திரசே கரனெனவே பெயருலாவும்
சுடலையதி லாடியதோர் தெய்வந்தன்னை
இந்திரனின் வார்த்தையினல் எதிர்க்கலாமோ
இனிதுடைய என்நாதா மாரவேளே.

ஈசன் முப்புரத்தையும் எரித்தகாக்ஷி

ஒப்பாரி

ஆதிஒர் நாளையிலே சோதியுடன் முப்புரத்தில்
அன்புடனே வாழ்ந்திருந்த துன்மார்க்கராக்கதர்கள்
அரவாபரணன் தன்னை சிரம்வணங்கியே துதித்து
அகோரதவம் தானிருந்தார் வெகுவாயசுரர்களும்
அதையறிந்த சங்கரனும் விதமுடனே வந்துநின்றார்
அசுரர்களைத் தான்நோக்கி பசுபதியும் ஏதுரைப்பார்
அருந்தவம் புரிந்தவரே வரமென்ன வேணுமென்றார்
அதுகேட்ட ராக்கதர்கள் ஓதுகிறார் அப்பொழுது

லாவணி

தேவர்களாலும் எம்மை ஜெயிக்க முடியா வரம்
தயவுவைத் தெங்களுக்கு தாரும்—போரில்
மேவி எங்களையாரும் மண்ணில் ஜெயித்திடாமல்
ஆள வரம் தருவீர் நீரும்-ஐயா தே

இராக்கதற்கு தேவர்கள் எப்பொழுது மடங்கி
இருந்திட வரமருள் ஈசா—இடர்
வராதிருந்து எங்கள் வகைகள் செழித்திடவும்
வரமொன்று தாரும் பிரகாசா-சிவமே தே

வரமது கேட்கவும் வள்ளல் பரசுபாணி
வாதுசூது இன்றி கொடுத்தாரையா—பின்னால்
புறப்பட்டு அசுரர்கள் பரிவாக தேவருடன்
பகைத்து யுத்தம் செய்யத் துணிந்தாரையா-ஐயா தே

இப்படியா யசுரர் இயல்புடன் அரசாண்டு
இருக்கின்ற நாளதனில் கேளுமையா—அந்த
செப்பரிய பிரமனும் சுரேந்திர பூபதியும்
சித்தமதில் யோசனை செய்தாரையா-ஐயா தே

அசுரர்கள் அமரரை ஆக்கினை புரிவதால்
அமர்செய்ய அரக்கர்மேல் கோபங்கொண்டு—வெகு
விசுவாசமாக அவர் அமர்புரிந் திளைத்துமே
வருத்தமதிகமவர் தானே கொண்டு-ஐயா தே

நாகத்தின்மீது பள்ளி கொண்ட அச்சுதனிடம்
நாதனே துன்பம் தீருமென்றுரைக்க—அவர்
ஆகாது எந்தனாலே அமராதிபனே கேளும்
ஆதிசிவனாலாகு மென்றுரைத்தார்-ஐயா தே

அனைவோரும் ஒன்றுசேர்ந்து ஆதிசிவனின் பக்கம்
அதிக வருத்தமுட னேதுரைப்பார்—ஈசா
மானை தரித்தவனே மாபாவி ராக்கதர்கள்
மாளாத்துயராக்கினா ரென்றுரைத்தார்-ஐயா தே

அமரனே நான்முகா ஆதிமூலரே யிப்போ
அசுரரை எதிர்த்திட லாகாது—நானும்
சமரதுபுரிந்திட வில்லேலது தேரேது
சாவது நிச்சயங்காண் புவிமீது-ஐயா தே

இராக்கதர் கையினாலே ஆயுள் முடிவதற்கோ
அவசரமாக வந்தீரென் றுரைத்தார்—இந்த
வாக்கியம் கேட்டிடவும் வணங்கியே தேவர்களும்
வள்ளலே காத்தருளுமென் றுரைத்தார்-நாதா தே

வீரியமாய் தேவர்கள் வகையுடன் ரதமொன்று
ஒருநிமிஷம் தனிலே தானமைத்து—அதற்கு
சூரிய சந்திரனைச் சக்கரமா யமைத்து
சதுர்முகன் சாரதியாய் வந்துநின்றார்-ஐயா தே

சதுர்மறை அஸ்வம்தனை தருணமே பூட்டிரதம்
ஜல்தியில் ஓட்டினாரா மப்பொழுது—அந்த
மாதுபாகனும் சிவன்கைதனில் வாசுகி
மகிமையாய் நாணாக கையில்தாங்கி-நாதா தே

அரிபரந்தாமனவர் அஸ்திரமாக நிற்க
ஆதிசிவனாரும் ஆர்க்கரிக்க—வெகு
பரிவுடனே ரதத்தைப் பக்குவமாய்நடத்தி
பகைவரிடம் தனிலே தானடக்க-நாதா தே

அமரர்கள் இவ்விதமாய் ரதமாய் சமைந்ததினால்
அசுரரை வெல்லவென்று ஆதிசிவன்—அவர்

சமரிடவே துணிந்து சாம்பசிவன் மனது
சந்தோஷ மாகவே வாரார்சிவன்-நாதா தே

போகும் போதுஅந்த பாசாங்குசதரனை
பூசித்திடா தவரும் செல்லும்போது—அந்த
நாகமணிந்த ஈசன் நம்பனின் பாதமதை
நாடித்துதித் தேறினர் தேரின்மீது-நாதா தே

தேவர்களும் சகியா திகிலடைந்து வீழ்ந்திட
தேருமுடைந்து அங்கே தூளாச்சு—நாம்
போவதெப்படியந்த பகைவர்கள் முன்னேயென்று
பரமன் தேவர்களுக் குரைக்கலாச்சு-நாதா. தே

இரதி வ-ம்:—நாதா! இந்திராதிதேவர்கள் எல்லோரும் தம்மால்தான் ஈசன் அசுரரை ஜெயித்து திரிபுரத்தை எரிப்பாரென மனோகர்வங்கொண்டு கஜமுகனைப் பூசை செய்யாமலும் ரதமாய் சமைந்ததைப்பார்த்த பரசிவன் அவரது வலது பாதத்தின் தேர்த்தட்டை ஊன்றிய உடனே தேர்முறிந்து போனதைக் கண்ட மகாவிஷ்ணுவும் பிரம்மாவும் ஆலோசித்து அமரர்களே! உங்களின் மனோகர்வத்தினால் இப்படியாச்சுதே யன்றி வேறல்ல; ஆயினும் இனியாவது கணபதியின் பூஜையை முடித்து சிவமே துணையென எல்லோரும் ரதத்தில் அமருங்களென்று உரைக்க, பிறகு தேவர்கள் ஒன்றுகூடி கணபதியை தியானித்து பகைவரை ஜெயிக்க வரமருளவேண்டி பூஜை நைவேத்தியங்களை முடித்து இப்போதுதான் புத்திவந்ததென்றுகூறி நூறு தேங்காய்களை யுடைத்து தூபதீப நைவேத்தியங்களைக் கொடுத்து தேவர்களெல்லாம் முன்போலவே ரதமாயமைந்தார்கள். பிறகு பரமன் சந்தோஷித்து தேரின்மீது ஏறி நாராயணாஸ்திரத்தை கரத்தில் தாங்கி திரிபுராதியர் முன்னேவந்து ஈசன் நின்றார். பிறகு,

இரதி சொல்லுதல்

ஷை லாவணி

பரமன் தேவருக்காக பரிந்து வருகிறதை
பார்த்தார் திரிபுரத்து ராக்கதர்கள்—அவர்மேல்

சரமாரி பொழியவே ஜல்தியில் வில்லேந்தி
சந்திரசே கரனும் வந்துநின்றார்-ஐயா ப

வந்த அசுரர்களும் வீராவேச மாகவே
வில்தொடுத் தம்புவிட்டார் அப்பொழுது—உடனே
அந்தமுடனே சிவன் நாராயணாஸ்திரத்தை
அசுரர்மீது விடவே சாய்ந்தார்நொந்து-நாதா ப

சத்திசிவ னப்போது சூரர் கர்வமடங்க
சாம்பலாய் செய்யஎண்ணங் கொண்டாரே—அவர்
மெத்த கோபத்துடனே முக்கண்ணையும் திறந்து
முழித்து முப்புரம் தன்னை எரித்தாரே-நாதா ப

திரிபுரம் தன்னிலுள்ள துஷ்டராக்கத ரெல்லாம்
தீக்கிரையாகி வெந்தா ரப்பொழுது—தேவர்
பரிவாய் சந்தோஷமானார் அறிந்ததில்லையோ நீர்தான்
பரமனிடம் உன்னுயிர் தப்பாது-நாதா. ப

மன்மதன் சொல்வது

பரமனின் திருவிளையாடல் ஒப்பாரி

அன்புடைய மெய்ரதியே தென்புடனே நீகேளும்
ஆபத்து நேராது தீபச் சுடரொளியே
இதமாகத் தாதியுடன் பதமுடனே தான்கூடி
ஈடற்ற பூங்காவன மேடைமீது நீயமர்ந்து
உத்தமியே விளையாடி சித்தமது தான்களித்து
ஊக்கமுடனே யிருப்பாய் சீக்கிரத்தில் யான்வருவேன்
என்மயிலே ரத்தினமே கண்மூன் றுடையோன் மகளே
ஏதடிஉன் தகப்பன்தனை ஓதினாய் சமர்த்தனென்று
ஐயன் சமர்த்ததனை யானுரைப்பேன் கேளுமடி
ஒவ்வியமாய் வேடனெச்சில் செவ்வையுடன் உண்ணவன்டி
ஓதுவேன் அவன்பேரும் சாது கண்ணப்பனடி
ஔவியமாய் சிறுத்தொண்டன் ஆசை பிள்ளைதனையறுத்து
கறிதனைத்தானெடுத்துப் பொரித்துவைக்க சொன்னவண்டி
காலனைஉதைத்து அன்று பாலகனை காத்தவண்டி

கிழவிசுடும் பிட்டைதின்ன தழுவிமண்ணே சுமந்தவண்டி
கீழான வேடுவன்போல் கிரீடிமுன்னே வந்தவண்டி

குண்டுபண்ணி தன்னைகேட்டு சண்டைசெய்து நொந்தவண்டி
கூறும்பத்மா சூரனுக்கு பயந்தோடி ஒளித்தவண்டி

கெதியின்றி பிணத்தையெல்லாங் குதித்தவன் தின்னவண்டி
கேடுகெட்ட வேடன்கையில் கோடிஅடியுண்டவண்டி

கைதனிலே பிரம்மன் தலை வையகத்தில் சுமந்தவண்டி
கொம்பனைமார் கற்பழிக்க வம்பாய்காவி யணிந்தவண்டி

கோரியே அன்னமென்று கூறிபிச்சை எடுப்பவண்டி
சதியாய் வல்லாளனுக்கு தலைமகனாய் வந்தவண்டி

சாம்பலதை பூசி வீம்புடன் திரிந்தவண்டி
சிதம்பரத்தில் காளியுடன் திருநடனஞ் செய்தவண்டி

சீருடனே கங்கைதனை ஜடையில் சுமந்தவண்டி
சுடலைதனில் ஜடைவிரித்து திடமாய் அலைந்தவண்டி

சூக்ஷமுடன் ஓடெடுத்து சோறுரத்தம் உண்ணவண்டி
செப்பும்அன்பர் வரங்கேட்டால் ஒப்பிபெண்டை தந்தவண்டி

சேதியதுதானறிந்த திருமாலும் என்தகப்பன்
சையோக பெண்ரதியே சாற்றுகிறேன் கேளுமடி

சொல்லரிய தான்மீட்டார் தோதுடைய என்தகப்பன்
உன்தகப்பன் சேதியதை உன்னதமாய் சொல்லவந்தாய்
அன்ன ரதியே நீ அஞ்சாதே என்றுரைத்தான்

இரதி சொல்லுவது

திருமால் திருவிளையாடலின் ஒப்பாரி

சீர்மிகுந்த என்கணவா
பேர்மிகுந்த மன்னவரே
சொல்லுவதை கேளுமையா
சொகுசுள்ள அங்கஜரே
சிறப்புடன் என்தந்தைதனை
உரைத்தாய் நீர்வெகுஇழிவாய்

செப்பிடுவேன் உன்குலத்தை
ஒப்பமுடன் கேட்டிடுவீர்
ஜாதியில்இடைய னல்லோ
சமர்த்தரே உன் தகப்பன்
ஜல்தியில் குடுவைவெண்ணெ
அள்ளியள்ளி உண்கலையோ
சேயிழையார் தான்பார்த்து
ஆயன் தன்னை உரலில்கட்டி
ஜாடியடிக்கலையோ
கூடியன்று மத்தாலே
சங்கராந்திக்கு மறுநாள்-மாட்டு
பொங்கல்சோறு தின்கலையோ
சமர்த்தாய் கோவர்த்தனகிரியை
தான்குடையாய் பிடிக்கலையோ
சமாளியாது முன்னொருநாள
தண்ணீரில் ஒளியலையோ
சாற்று மிரண்யனுக்கு பயந்து
வேற்று சிங்க மாகலையோ
சாரதியாய் அர்ச்சுனர்க்கு
தனிரதத்தில் நிற்கலையோ
ஜாதியிலே இடையரல்லோ
சமர்த்தரே என்கணவா
சங்கரனின் தபநிலையில்
பொங்கமுடன் சென்றீரானல்
சாம்பலா யெரித்திடுவார்
வேம்பணிந்தாள் தன்கணவன்
சித்தஜனே போகாதே
இத்ததி என் வார்த்தை மீறி.

மன்மதன் வ-ம்:—கண்மணி! என் பிதாவின் பெருமையைப்புகல ஆயிரம் நாவைப்படைத்த ஆதிசேடனும் ஆகாது; அதுவும் தவிர வரம் அளிப்பது ஈசன் அழிப்பது வைகுந்த வாசன் என முதியோர்களின் சொல்லறிந்ததில்லையா; அதுவுந் தவிர ஆதியில் சோமுகாசூரன், கார்த்த வீரியார்ச்சுனன்,

இரண்யன், இரண்யாக்ஷதன், மர்பலி, ராவணன், கும்ப கர்னன், தந்தவக்ரன், கம்சன், பூதகி, தாடகை, சிசுபாலன் இன்னும் அநேக ராக்கதர்களை சம்ஹரித்து பெற்றவரங்களை அழித்தவரல்லவா. அப்படியிருக்க யானைக்குப்பிறந்து பூனை யாவேனோ, புலிக்குப்பிறந்து எலியாவேனோ, கண்மணி! ரதி தேவி.

மன்மதன் சொல்லுதல்

லாவணி

ஆதலால் பெண்மணியே ஆதிசிவன் தவத்தை
அழித்து வருவேனிதோ பாராய் பாராய்—எந்தன்
மாதே எனக்கு விடை மகிழ்ந்து தருவாயோடி
மங்கையே போய் வருவேன் சீராய் சீராய் ஆ

சுரர்பதியின் பொருட்டு சூலபாணியின் தவம்
தோகையே யானழித்து வாரேன் வாரேன்—அந்த
நரஹரி எந்தன் பிதா ராமமூர்த்தியிருக்க
நானுமிந்திரன் சொல்லை மீறேன் மீறேன் ஆ

தோழிகளுடனேநீ சொகுசுடன் விளையாடி
தோகையே இங்கிருப்பாய் மானே மானே—இந்த
ஆழிசூழுலகினில் அன்பன் தியாகராஜனின்
அருள்கவி தானிதடி தேனே தேனே. ஆ

இரதி சொல்லுதல்

லாவணி

சந்த்ரசேகரனிட சமர்த்தை யுணர்ந்திடாமல்
தபசை யழிப்பதற்கு செல்லாதீர்—இப்போ
எந்தன் வார்த்தையைதட்டி ஈசனிடம் போகாமல்
என் மணவாளரே நீரிங்கிருப்பீர்-நாதா ச

அயனும்அரியும் ஓர்நாள் அன்புடனே சமர்த்தாய்
அங்ஙனம் வாதுபேசிக் கொண்டிருந்தார்—அந்த
கியாதியுடைய சிவன் ஏகலிங்கமாய் நின்று
கெம்பீரமா யிருவர்க் கேதுரைப்பார்-நாதா ச

முடியைக்கண்டு ஒருவர் அடியை ஒருவர்கண்டு
முடிகியே வேகமுடன் என்முன் வந்தால்—முன்னால்
ஜடுதியில் வந்தவரே தானே பெரியோரென்று
தரணிதனில் புகழ்வார் என்றுரைத்தார்-நாதா ச

சரியென பிரம்மதேவன் பரிவாய் அன்னபக்ஷியாய்
ஜிவ்வென வேபறந்து சென்றனரே—அதை
கருமுகில் வண்ணன் கண்டு காலடி தன்னைக்காண
கடுகி ஏனமாய் பாரை துளைத்தனரே-நாதா ச

ஈசன் முடியதனை காணாமலே மனது
இளைத்துமே பிரம்மதேவன் தான்வருந்த-அப்போ
வாசமிருந்ததொரு தாழைமலர் எதிரில்
வகையுடன் வரக்கண்ட நான்முகனும்-நாதா ச

தாழைமலரே நீரும் தானெங்கிருந்து வாரீர்
தருண முறையுமென கேட்கலுற்றார்—உடனே
வேழமுகனை ஈன்றோன் வள்ளல் முடியிருந்து
வருகிறேனென்று சொல்ல ஏதுரைப்பார்-நாதா ச

எந்தனுடனே வந்து இயல்பாய் விஷ்ணுவிடத்தில்
ஈசன்முடியை யானும் கண்டேனென்று—நீரும்
சொந்தமுடனுரைத்தால் சபதம் ஜெயிக்குமையா
தயவுடனே என்னுடன் வாரும் இன்று-நாதா ச

பொய்சொல்லத் துணிந்ததோர் பண்புள்ள தாழைமலர்
பக்ஷமாய் விஷ்ணுபக்கல் வந்துநின்று—உடனே
வாய்திறந்து உரைக்கும் வந்ததோர் தாழைமலர்
வண்மையுடனே ஈசனிடத்தில் அன்று-நாதா ச

இவர்தான் உந்தன்முடியில் இருந்த என்னையெடுத்து
இங்ஙனம் வந்தாரையா என்றுரைக்க-அதை
அவனியளந்த மாயன் அன்புடன் கேட்டிடவும்
அதிசயித்து மனம் குண்ணி நின்றார்-நாதா ச

ஐயா சிவபிரானே அடியேன் வராகமாகி
அடிமலர் தன்னைக்காண முடியாமல்—நான்

ஓயாக்கவலைகொண்டு உன்னிடத்தி லடைந்தேன்
உமாபதி இந்தசூதுக் கேதுரைப்பேன்-என்றார் ச

என்று உரைக்க ஈசன் ஏக கோபமடைந்து
எழிலாக தாழைமலர்க் கேதுரைப்பார்—நீ
இன்றுமுதலிருந்து என்முடிக்கு வாராதே
இப்போதே என்னைவிட்டு செல்லுமென்றார்-நாதா ச

சூது உரைத்ததொரு சதுர்முகா உந்தனுக்கு
சன்னதி குளங்களும் இல்லாமல்—இந்த
மேதினியில் நீயும் இருக்கக்கடவாயென்று
மங்கை ஈஸ்வரிபாகன் சொன்னாரன்று-நாதா. ச

இரதி சொல்லுதல்

எண்சீரடி விருத்தம்

தேவர்கட்கு ஆதாரமாக வந்த
திருநீலகண்டன்மேல் கணைதொடுத்தால்
மேவியவர் உந்தனையே சாம்பலாக
மேன்மையுடன் எரித்திடுவார் நெற்றிக்கண்ணால்
தாவியேநாம் சுகமுடனே சிவத்தைநாளும்
தரணிதனில் பூசித்து வாழ்ந்திருப்போம்
கோவிந்தன் தன்சுதனே மாரவேளே
கழலடியை இவ்வடியாள் பணிந்திட்டேனே.

மன்மதன் சொல்லுதல்

லாவணி

ஏதேதோ ஓதுகிறாய் ஏந்திழையாளே நீயும்
எந்தன் சமர்த்தையறியாது
மொழிகின்றாய் நீ மாது
தடுப்பது தகாது
விடையீவா யிப்போது-அந்த
மேகநிறமாயனும் மேட்டிமையா யிருக்க
மனதில் படமும் ஏது

இந்திரன் சொன்னவாறு இப்போதே யானும்சென்று
ஈசன் தபசழித்து வருவேன்
அடி எந்தனின் திருவே
அதிக ஜெயம் பெறுவேன்
அதிசீக்கிரம் வருவேன்-சிறு
மைந்தன் தியாகராஜனை மாக்ஷிமையுடன் காக்கும்
மயிலோன் அருளைப்பெறுவேன் எ

இரதிதேவி சொல்லுதல்

நளன் ஒப்பாரி

தீரமுள்ள என்கணவா மாரவேனே கேளுமையா
தேசமாண்ட மன்னர்களில் ராஜன்நளச் சக்ரவர்த்தி

திரமாய்பீம ராஜனிட அரும்புதல்வி தமயந்தியை
திருமணமும் தான்முடித்து பெருமையாய் நிஷதபுரத்தில்

தீவிரமாய் ஓர்குடைக்கீழ் மேவியர சாளையிலே
தாவியே சனியனவன் பாவியுமே அங்குவந்து

தான்கோரிய பெண்ணை நள மன்னன்மணம் சூட்டினதாய்
தீரொணு கோபங்கொண்டு ஆர்க்கரித்து தான்நடந்தான்

தயவுடனே புஷ்கரனின் நெஞ்சில்மாய மாய்புகுந்து
தருணம்நள ராஜனின்மேல் அருவருப்புண்டாக்கிவைத்தான்

தளபகடை யாடுதற்கு நளனிடத்தில் புஷ்கரனும்
தாட்டிகமாய் ஆடவென்று மேட்டிமையாய் பேசுகையில்

தமயந்தி தான்பார்த்து அமைதியுடன் சொல்லுகிறாள்
தரணியாளு மென்புருஷா உறுதியாய் சூதாடாதீர்

தகாதுயிது நமக்கு வகையுடனே ஆடவேண்டாம்
தேன்மொழி யாளுரைக்கும் நன்மொழியைக் கேட்டிடுவீர்

தோதுடைய சாஸ்திரங்கள் ஓதினதை கேட்டிருந்தும்
தீதுடைய இச்சூது வாதுசெய்யும் ஆதலினால்

தாள்பணிந்தேன் இம்மாது கேளுமையா என்மொழியை
தயாபரரே எனவுரைக்க ஞாயமில்லை யெனஅவனும்

தட்டிவிட்டு சூதாடி அட்டியின்றி நாடுயெல்லாம்
திட்டமுடன் தான்தோற்று பத்தினியையும் பிரிந்து
தீராதகஷ்டப்பட்டு ஆருத் துயரமுற்றூர்
தாமோதரன் மகனே நேமமுள்ள மன்மதரே
தையல் வார்த்தைதள்ளிநளன் வையகத்தில் பாடுபட்டான்
தீதாக என்வார்த்தை நாதா நினையாதீர்
தம்பிரான் தவம்கலேக்க வம்புசெய்து போனீராஞல்
தணலா எரித்திடுவார் கணவா யெனஉரைத்தாள்

மன்மதன் சொல்லுதல்

ஒப்பாரி

கண்மணியே எந்தனிட அன்புள்ள மெய்ரதியே
கரியமால் என்தகப்பன் முரஹரியின் தன்பெருமை
கழறுவேன் கேளுமடி அழகுள்ள கண்மணியே
கடுமையுள்ள ராக்கதனும் படுபாவி பத்மாசூரன்
கனிவுடனே தவமிருந்தான் துணிவுடனே அப்பொழுது
கஞ்சா வெறியனடி அஞ்சுகமே உன்தகப்பன்
கனமுடனே ராக்கதன்முன் மனதுவைத்து தான்தோன்றி
கேட்டவரம் தருவேனென்றூர் மேட்டிமையா யப்பொழுது
குடிகேடன் ராக்கதனும் துடியாக ஏதுரைப்பான்
கர்த்தாவே என்குருவே விருத்தாந்தம் கேட்டிடுவீர்
கையை எவர்சிரசில் வையமதில் வைப்பேனே
கணலா பெரியவரம் மனதுவைத்து தாருமென்றுன்
கபடுசூது தானறியா உமாபதி உன்தகப்பன்
காருண்ய மாகவரம் வீரியமாய் தானளித்தார்
கீர்த்திவரம் பெற்றவுடன் கீர்த்தியுள்ள ராக்கதனும்
கடவுளே நீயெனக்கு திடமுடனே கேட்டவரம்
கிருபைவைத்து தந்ததினுல் தருணமே உன்சிரசில்
கட்டழகா கையைவைத்து திட்டமுடன் பார்ப்பேனென்றுன்
கேட்டவுடன் ஆதிசிவன் ஓட்டமிட்டார் ஐவேலன்
காட்டினிலே போயொளித்தார் வாட்டமுடனப்பொழுது

கலங்கியே ஓடினதை நலமுள்ள என்தகப்பன்
கண்டறிந்து மனம்பதைத்து அண்டவொண்ணு கோபமுடன்

கானகத்தில் மோகினிபோல் ஆனந்தமாய் அவதரித்தார்
கடுந்துரோகி தன்னெதிரில் நடந்துவாராள் மோகினியும்

கிளிமொழியாள் தோன்றிடவே வலிவுடைய பத்மாசூரன்
கட்டிசேர இச்சையுற்று பட்டிமகன் நின்றுவிட்டான்

காமக்கருங்குயிலே என்னை நேமமுடன் சேருமென்ருன்
கசடனிட வார்த்தைகேட்டு விசேடமுட னேதுரைப்பார்

கங்கை கரைக்கேகி மங்களமாய் ஸ்நானம்செய்து
கடுகியே வந்தாயானுல் முடிகியே சேர்ந்திடலாம்

கன்னிகையின் வார்த்தைகேட்ட துன்மார்க்க பத்மாசூரன்
காடெல்லாம் தானலைந்தான் குட்டைகுளம் காணுமல்

கோவின் குளம்பில் ஜலம் மேவியவன் தான்பார்த்து
கொஞ்சம் கரந்தனிலே சஞ்சலமிலா தெடுத்து

கரத்தை தலைமீது வைக்க வரத்தின் மகிமையினுல்
கலந்துபற்றி தானெரிந்தான் நலமில்லா பாவியவன்

காருலகோர் தான்மகிழ்ந்தார் நாரணன்செய் சூக்ஷிதனை
கங்காதரன் முன்னேவந்து சக்கரத்தோன் ஏதுரைப்பார்
காதகனும் தானெரிந்தான் பூதநாதா வாருமென்ருர்

எண்சீரடி விருத்தம்

சங்கரனும் மோகினியை பார்த்தபோது
சமர்த்துடைய ஐயனுர் தான்பிறந்தார்
மங்களமாய் அரிஹரனின் புத்ரனென்று
மாக்ஷிமையாய் திருநாமம் தன்னைசூட்டி
இங்கிர்தமாய் அன்பர்களை ஆதரிக்க
எழில்மிகுந்த என்தகப்பன் இருக்கும்போது
கங்கைதனை முடிமீது அணிந்தஈசன்
கணலாக எனைஎரிக்கார் அஞ்சிடாதே.

இரதிதேவி சொல்லுதல்

அரிச்சந்திரன் சரித்திர ஒப்பாரி

சரசமுள்ள என்ராஜா சாற்றுவதை கேட்டிடுவீர்
சீருடனே முன்னொருநாள் பாரதனை ஆண்டுவந்த
சத்யநெறி தான்பிசகா உத்தமன் அரிச்சந்திரன்
சாதுவிஸ்வா மித்திரர்க்கு நீதமுடன் கடனும்பட்டு
சகலபணியு மிழந்து வகையாய் அயோத்தியுமிழந்து
சாற்றும்கடன் தீராது வேற்றுமையாய் தரகனிடம்
சகியொணு துன்பப்பட்டு மகனையும் மனைவியையும்
சோகமுடன் அந்தணர்க்கு வாகுடனே விற்று பின்பு
சுடலைதனில் வீரவாகுக்கு அடுமைபட்டு முனிகடனை
சந்தோஷமாய் கொடுத்தான் சத்திய ராஜனவன்
சந்திரமதி யவளும் அந்தணர்க்கு அடுமைபட்டு
சிந்தைநொந்து தன்மகனை அந்தமுடன் கானகத்தில்
சர்ப்பத்திற் கிரையாக்கி தானமுத பாவனைபோல்
சரந்தொடுத்து மாண்டீரானல் தரணிதனில் யானழுது
செத்து மடிவேனென்று சேயிழையாள் தானுரைத்தாள்

இரதிதேவிக்கும் மன்மதராஜனுக்கும் தர்க்கம்

இரதிதேவி லாவணி

அஞ்சாதே என்று என்னை அன்புடனே உரைக்கும்
அங்கஜா எந்தன் சொல்லை மீராதீர்—வெகு
சஞ்சலம் நேருமையா சங்கரன் கண்ணொளியால்
சாம்பலாய் ஆகநேரும் போகாதீர்—நாதா அ

மன்மதன் லாவணி

என்னை மறித்திடாதே ஏந்திழையே பெண்மானே
ஏகுறேன் ஈசனிடம் ரதிமாதே—முக்
கண்ணனின் தபசதை கணப் பொழுதிலழித்து
கடுகிவருவேன் மனம் வாடாதே—பெண்ணே ஏ

இரதி சொல்லுதல்

ஷ லாவணி

அழகு முகவொலியும் அமைந்த திரேகத்தழகும்
அரனிடம் போனல் யானும் காண்பேனே—உன்
கழலடி யான்தொழுதேன் கர்த்தரிடம் போகாதீர்
காதலா எந்தனுயிர் தரிக்கேனே—நாதா அ

மன்மதன் சொல்லுதல்

லாவணி

மாதர்சொற் கேளேனென்று மானிலத்தோர் சொன்னது
மெய்தானடி யதுவும் ரதிதேவி—கைலை
நாதனிடத்தில் சென்று நானே தபசழிப்பேன்
நாயகியே தருவாய் விடைதாவி—மானே மா

இரதி சொல்லுதல்

லாவணி

மறுக்காதே யென்றுசொன்னல் மனது சகித்திடுமோ
மாதுயெனக்கு சொல்லும் சிங்காரா—நீரும்
உருக்கமுடனே சென்றால் உம்பர்பிரா னுந்தனை
உடனே எரித்திடுவார் ஒய்யாரா—ஐயா ம

பொது வசனம்

மன்மதனை ரதிதேவி போகவேண்டாமென்று எவ்வளவோ தடுத்தும் கேளாமல் கையை உதறிக்கொண்டு அரண்மனையைவிட்டு வெளியில்வந்து தனது சாரதியாகிய வசந்தனை அழைத்து சொல்லும் விதம் காண்க.

மன்மதன் சொல்லுதல்

ஷ லாவணி

சாரதியே வசந்தா சாற்றுவே னொருவார்த்தை
சமயமிதுததியே வாராய் வாராய்—இந்த
நேரந்தனிலே நீயும் ஜோராய் ரதம் ஜோடித்து
நன்மையுடனே வாரும் சீராய் சீராய் சா

அழகுள்ள சித்திரத்சேர் அன்புடனே ஜோடித்து
அதில் பஞ்சவர்னக்கிளி ஜோராய் ஜோராய்—நல்ல
பவழத்தால் கால்கிறுத்தி பெண்கள் சேனையுடனே
பரிவுடன் சிங்காரித்து வாராய் வாராய் சா

பொது வசனம்

வசந்தன் மன்மதன் உரைத்தவாறு அதிக அழகுடன் ரதத்தை ஜோடித்துக்கொண்டுவந்ததும் அங்கஜன் ஆனைமுகக் கடவுளை தியானிக்கும் விதம் காண்க

மன்மதன் விருத்தம்

ஆனைமா முகனே போற்றி
அரனிட புதல்வா போற்றி
பானைபோல் வயிறு குலுங்கும்
பகவானே நின்தாள் போற்றி
மானதை தரித்த ஈசன்
மாதவ மழிக்க யானும்
தோணவே வரமும் தாராய்
தோன்றலே போற்றி போற்றி.

மன்மதன் கணேசர் பூஜை செய்தல்

ஷை லாவணி

வாரண மாமுகனே வந்தெனை யாண்டருள
வாகை மலரடியை பணிந்தேனே—ஐயா
நாரணரின் மருகா நந்திநம்பனின் தவம்
நானே கெடுக்கவருள் நீதானே—சுவாமி வா

அவல் கடலையுடனே அதிரசம் முப்பழமும்
அன்புள்ள சீனியுடன் யான் தருவேன்—இன்னும்
மூவாயிரம் தேங்காயும் மாம்பழமு மனேக
மாதளங் கனிகளை யான் தருவேன்—ஐயா வா

பாயசம் போளியுடன் பானகம் நீர்மோரும்
பலகார பக்ஷணங்கள் யான்படைப்பேன்—ஒரு
ஆயிரம் எள்ளுருண்டை அன்புடன் யானும்வைத்து
அழகாய் மலர்வகைகள் யான்தொடுப்பேன்-சுவாமி வா

ஜாதி மல்லிகையுடன் தவனம் மருக்கொழுந்து
சண்பகம் பாரிஜாதம் இருவாக்ஷி—உனக்கு
ஜோதியுள்ள மலரால் பூஜித்து யான்படைப்பேன்
தருந்தவரம் தந்துநீ செய்குக்ஷி—நாதா வா

ஆதி ஓங்காரநாதா ஆனைமுகப்பொருளே
அடைக்கல மடைக்கலம் கண்பாரும்—இந்த
சேதியுரைத்த தியாக ராஜன் கவியதனில்
செப்பும் பிழைபொறுத்து எனைகாரும்—சுவாமி வா

பொது

எண்சீரடி விருத்தம்

ஐங்கரர்க்கு மன்மதனும் படையலிட்டு
அருமையுள்ள கனிவகைகள் எள்ளுருண்டை
பொங்கலுடன் புளியோரை சுண்டல்வாழை
பழமுடனே பாயசமும் போளியிட்டாய்
மங்களமாய் இலைமீது தானேவைத்து
மாக்ஷிமையாய் கற்பூர தூபங்காட்டி
இங்கிர்தமாய் அவர்பாதம் தன்னைப்போற்றி
ஏறினான் மன்மதனும் ரதத்தில்தானே.

மன்மதன் ரதத்திலேறி போகும்போது வழியில் அவசகுணங்கண்டு புலம்பல்

லாவணி

இந்திரன் சொல்லைப்போல ஈசன் தபசழிக்க
ஏறினேன் ரதமீது—ஏழை என்மேல்
இன்னுமாகுமா வாது
சிந்தையது கலங்கி ஜீவன் துடிக்குதையோ
தேவனே ஏதுசெய்வேன்—சிறுவன் மனம்
தயங்குதெவ்வா றுய்வேன்
எந்தனின் பத்தினியாள் ஏந்திழை ரதிதேவி
எடுத்துரைத்ததை மீறி—யானும் வந்து
ஏங்கி வாடுறேன் பாரில்

வந்தே னிதுவழியாய் நேரே—பொல்லா
வகையுள்ள சகுணங்கள் பாரே
அந்தமாய் எந்தனிட ஆவியும் சோருதுகாண்
அருள் தருவாயிப்போது—ஆனைமுகனே

குட்டியதனை ஈன்ற கரும்பூனை எந்தனிட
குறுக்காய் போகுதே வேதா—கலங்குதெந்தன்
குடலது கணநாதா

மொட்டை தலையனவன் கட்டை சுமந்துவாரான்
காரணமறியேனே—கஜமுகனே
கார்த்தருள் சீமானே

கட்டுக்கழுத்தியவள் கைவளையலதனை
கதரி உடைக்கின்றாளே—கணபதியுன்
கழல் பணிந்தேனிவ்வேளை

மட்டிடா மொட்டை பார்ப்பான் எதிராய்-அவன்
திட்டமாய் வாரானதோ சதிராய்
கட்டுவிரியனது கருத்தாய் இடபுறமாய்
காணுவதுமேது-கண்ணன் மருகா

கறுப்பு புடவைகட்டி கன்னி மனங்கதறி
கனமாய் தரையை மோத—கலங்குதெந்தன்
காலை மனமும் ஓத

கரடி புலியும் யானை கழுதை நாய் நரிகளும்
கோவென்று ஓலமிடவும்—கண்ணையிழந்த
குருடி தவறி விழவும்

வெறும்பானை யதுவொன்று வழிதனி லுருண்டிட
வகையுடன் கண்டேனே—மனது மெத்த
வருந்தி புலம்புறேனே

பெரும்பன்றி ஓடுதுபார் நேரே—பாழும்
புழுக்கள் சிரிக்குதடோ பாரே
வருத்தங்களாகுதையோ வாரணமாமுகனே
வணங்கினேன் என்னைப்பாது-கார்த்திடவும்

அங்கம் பதறிடவே யாரோ ஒருவன் குடம்
எண்ணையை போட்டுடைக்க—எதிரிலொரு
ஆந்தையலரி துடிக்க

சங்கையின்றி முண்டைகள் சண்டைகள் செய்துமவர்
சாபங்கள் மிகப்பேச—தயங்குறேன் யான்
தற்காரு மருள்வாசா

பொங்கமாய் ஓர்கம்மாளன் புறப்பட்டு எதிரினில்
பதமாய் வரக்கண்டேனே—வண்ணனொருவன்
பதறிப் புலம்புறானே

கங்கைக்கரையில் மங்கைமார்கள்—இன்று
கதறி ஏனோ அழுகின்றார்கள்

தங்கியே ஏணியுடன் சாணானும் எதிர்வர
தயங்குறேன் புவிமீது—தயாபரனே

கண்யமுடன் கழுகு கண்டு என்னை முறைக்க
காலவித்தியாசந்தானோ—சிறுவன் மீது
கடும்பகை உனக்கேனோ

இன்பமுடன் ஒருத்தி எதிரினில் கருவாடு
ஏந்தி சுமந்துவரவும்—கருங்குருமான்
இளைத்து பிராளுவதுவும்

நன்னயமாகயானும் நாயகி பேச்சைத்தள்ளி
நாதன் தபசையழிக்க—நாடிவந்தேனே
நந்திநம்பனை பழிக்க

கொன்றைமலரணிந்தோன் மகனே-என்னை
கார்த்தருளும் கஜமுகனே

சின்னஞ் சிறுவன் தியாக ராஜன் கவியைப்பாடி
செல்லுகிறேனிப்போது—சதங்கைப் பாதா இந்தி

மன்மதன் வ-ம்:-ஹா! பரமேசா அச்சண்டாள தேவேந்திரனின் சொல்லைக்கேட்டு என் மாது எனக்கு எவ்வளவோ எடுத்துரைத்தும் கேளாமல் யான் உன் தபசினை கலைக்க வந்தேன்; வந்தும் வழியில் ஆகாச்சகுனங்களைக்கண்டு என்

மனது திகிலுற்றுவருந்துகின்றேன்; ஈசா யான் என் சுயபுத்தி யைக்கொண்டு செய்யவந்த பிழையல்ல; அச்சண்டாள சுரேந் திரனுக்கு அளித்த வாக்குதத்தம் பொய்க்காமல் இருக்கும் பொருட்டே யான்வந்தேன். ஆயினும் உன்னையே சதமென நம்பியிருக்கும் இவ்வடியேனை கார்ப்பது உன் கடமையே ஹா!

[மன்மதன் தேர்தட்டில் சாய்கின்றான்]

தேர்தட்டில் சாய்ந்த மன்மதனை வசந்தன் விசாரித்தல்

ஷை லாவணி

ஐயா அங்கஜவேளே அழகு ரதிகணவா
அன்புடன் தேரின்மீது சாய்ந்ததென்ன—எந்தன்
துய்யனே அந்த விபரந்தனை இப்பொழுது
தோற்றவே தானுரைப்பீர் எந்தன் முன்னே-நீரும் ஐ

எழுந்து களைப்பாறி எழிலுடனே நீரும்
இப்போ தெனக்குரைப்பாய் சிங்காரா—என்ன
பழுதுவந்த துனக்கு பகருவாய் இத்ததியே
பஞ்சபாணரே நீரும் ஒய்யாரா—மாரா ஐ

வசந்தன் வ-ம்:—சுவாமி! தாங்கள் என்ன காரியார்த்த மாக இவ்வளவுதூரம் வந்து இப்போது தேர்த்தட்டின்மீது சாய்ந்து விசனப்படுவதற்கு காரணமென்ன? தாங்கள் எழுந் திருந்து தங்களின் மனோவியாகூலத்தை அடியேனுக்கு புகலு மாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

மன்மதன் வசந்தனுக்கு உரைத்தல்

ஒப்பாரி

சாரதியே வசந்தா காரணமும் யானுரைப்பேன்
சங்கரன் தபத்தின்தணல் இங்கிர்தமாய் வானுலகம்
சகிக்கமுடியாமல் தகிப்பதால் இந்திரனும்
சாற்றினன் எந்தனுக்கு நேர்த்தியுடன் அத்தபசை
சிர்குலைத்து வாருமென்று வார்த்தையது தானுரைத்தான்
செழித்தசுய வஞ்சகமாய் அழிக்கும்படி தானுரைத்தான்

சரியென்று யானுரைத்தேன் அறியாத புத்தியினல்
சித்தமது தான்துடித்து அத்ததியென் பத்தினியாள்
சாம்பசிவன் முன்னாலே அரும்புமலர் நீர்தொடுத்தால்
சாம்பலாய் உனையெரிப்பார் தீம்புவரு மென்றுரைத்தாள்
சேயிழையின் வார்த்தைதனை பாவியும் நான்மறுத்து
சந்தோஷமாய் தேரேறி அந்தமுடன் வருகையிலே
சரியில்லா சகுணமது பரிவுடனே யானுங்கண்டு
ஜீவன் துடிதுடித்து மேவியே யானழுதேன்

மன்மதனுக்கு வசந்தன் புத்திகூறல்

ஷை லாவணி

அங்கஜா இப்பொழுது ஆவதென்ன நீரும்
அரண்மனைக்கு ஏகலாம் வாருமே வாருமே வாருமே-நாமும்
சங்கரனிடமேவி சங்கைப் படுவோமானால்
தர்க்கார்ப்போர் யாருண்டுகாண் கூறுமே கூறுமே கூறுமே

புரந்திரன் பேச்சைக்கேட்டு புறப்பட்டு நாமும் சென்று
பரமன் தபசழிக்கப் போகுமா போகுமோ-அரனால்
மாரனேநீர் மடிந்தால் மன்னவ னிந்திரனும்
மனது வைத்துன்னை காக்கலாகுமா ஆகுமா ஆகுமா அ

உந்தனின் நாயகியாள் உத்தமி ரதிதேவி
உடனேமடிந்திடுவாள் காணுமே காணுமே காணுமே-ஐ
எந்தனரசேநீரும் ஈசனிடம் செல்லாமல்
என்வார்த்தை போலவர வேணுமே வேணுமே வேணுமே

திரிபுர நேத்திரியாம் தேவனின் நெற்றிக்கண்ணால்
திக்கென்றெரிந்திடுவீர் மாரனே மாரனே மாரனே-இப்போ
வேறுமொழிச் சொல்லாமல் வேந்தே யிதுசமயம்
வீட்டிற்கேகுவோம் வாரும் தீரனே தீரனே. அ

மன்மதன் வ-ம்:—வசந்தா! நீ உரைப்பது நீதியாகுமா, எனைப்போலொத்தவர்களுக்கு கியாதியாகுமா; அரன் தபசை அழித்து வருவேனென்று அமரர்பதி அதிக ஆவலுடன் எதிர்நோக்கிய வண்ணமாக இருப்பாரே அதுவும் தவிர யான்

உன் வார்த்தையைப்போல் வீட்டிற் கேகிவிட்டால் என்னை அப்புரந்திரன் பலவிதமாக நிந்தனைபுரிந்து தூஷிப்பானே; அதற்கென்னசெய்வது? வரும்விதி வழியில் நில்லுமா; ஒருக் காலும் நில்லாது அப்படியிருக்க,

மன்மதன் சொல்லுவது

லாவணி

சாரதியேவசந்தா ஐக்காமலித்ததியே
    செல்வாய் இமையமலைச் சீராய் சீராய்—அந்த
பாரளந்தோன் சுதன்யான் பரமனிடத்திலேகி
    பாரதபசழிப்பேன் பாராய் பாராய் சா

இதற்கு நாமஞ்சலாமோ எழில்மிகுந்த வசந்தா
இப்போ ரதத்தைவிடும் சொன்னேன் சொன்னேன்-நம்மை
சதமென வேயடைந்த சுரேந்திர பூபனைநாம்
சோரவிட லாகுமோ இன்னே இன்னே.

பொது லாவணி

மன்மதன் சொல்லைப்போல மாவீரமாய் வசந்தன்
    மகாலிங்கம் முன்பாகவே அன்று அன்று-வெகு
சொன்னயமாய் ரதத்தை சுருக்காக ஒட்டிவந்து
    சாம்பசிவனைக் கண்டான் நன்று நன்று ம

வந்தவுடன் வசந்தன் வகையொன்று முணராமல்
    வர்மமுடன் திகைத்துநொந்தான் நொந்தான்—காமன்
எந்தவிதத்தில் நாமும் ஈசன் தபசழிப்போம்
    என்று மனம்வருந்தி சாய்ந்தான் சாய்ந்தான் ம

பொது வசனம்

மன்மதன் சொல்லைக்கேட்ட சாரதியாகிய வசந்தன் தேரைநடத்தி வந்து இமையமலை அருகாமையில் ரதத்தை நிறுத்திவிட்டு அருந்தபசுபுரிந்துநின்ற ஈசனைக்கண்டு வசந்தன் பிரமிக்கவும் மன்மதன் ஈசன்மீது மலர்கணை எவ்விதமேவுவது என்று விளங்காமல் வருந்தி பிறகு ஈசனை தியானிக்கின்றான்

மன்மதன் சிவஸ்தோத்திரம் புரிவது

(ராமபஜனை ஹோதியா என்ற வர்னமெட்டு)

பல்லவி

சத்துசித்தானந்தனே—சதாசிவனே
சத்துசித்தானந்தனே

அநுபல்லவி

ஜித்துசெய்து இந்திரன் சேதியுரைத்தானே
ஜென்மபகை யானேனே—உனக்கு யானே
ஜென்மபகை யானேனே (ச)

சரணங்கள்

அன்பர்க்குபகாரனே ஆனையுரித்தவனே
அரனே உன் பாதம் யானே—அணுகினேனே
அரனே உன் பாதம் யானே (ச)

முன்பிறப்பின் வினையோ மூண்டது இப்பிறப்பில்
மான்மழு தரித்தவனே—மகாதேவனே
மான்மழு தரித்தவனே (ச)

திரிபுரத்தை எரித்த தாண்டவனே யென்னை
தயவுவைத்தாள் பரனே—தயங்குறேனே
தயவுவைத்தாள் பரனே (ச)

மண்சுமந்து பிட்டுக்கு மகிழ்வாய் அடியும்பட்ட
முத்திக்கு ஆதாரமே—எனைக் காருமே
முத்திக்கு ஆதாரமே (ச)

வாடிய நாரைக்குஅன்று வந்து மோக்ஷமளித்த
வள்ளலே ஜோதிமயமே—வர்மமும் ஏனோ
வள்ளலே ஜோதிமயமே (ச)

பரமனே உன்னடிமை பாலகன் தியாகராஜன்
பாடிவைத்திட்ட கீதமே—பராபரமே
பாடிவைத்திட்ட கீதமே. (ச)

தவத்திலிருக்கும் ஈசனை நோக்கி மன்மதன் சொல்லுதல்

எண்சீரடி விருத்தம்

சித்தர்களும் முனிவர்களும் இன்னுமற்ற
 தேவர்களு மசுரர்களும் உனைத்துதித்து
பக்தியுடன் தவமிருப்பார் கோடாகோடி
 பரமனே யிச்சமயம் பரிவாய்நீரும்
எத்துடனே இம்மலைமேல் எவரைவேண்டி
 எழிலுடனே ஜடைவிரித்து அமர்ந்துஉந்தன்
சித்தமதை நிலைநிறுத்தி தபசுசெய்யும்
 செய்தியதை எந்தனுக்கு உரைசெய்வீரே.

மன்மதன் சொல்லுதல்

லாவணி

பரிவாய்நீர் யாரைக்காண பக்தியுடன் தபசு
 புரிகின்றீரோ சதாசிவமே—அதை
விரிவாக எந்தனுக்கு உரைக்கவேணுமையனே
 உம்பர்பிரானே ஜோதி மயமே—ஈசா ப

அந்தரத்தமரரும் அசுரர் முனிவர்களும்
 அரனே உனைக்குறித்து அருந்தவமே—புரிய
சந்திரசேகரனே தருணமவர்க்கு வரம்
 சாமிகொடுத்தருள் பராபரமே—ஐயா ப

வெண்ணீறு தன்னைப்பூசி விரித்து ஜடையதனை
 விமலனே புலித்தோலை தான்விரித்து—முக்
கண்ணனே மௌனமாக காலமடித்தமர்ந்த
 காரணம் தனைச்சொல்லும் நீரெடுத்து—சிவமே ப

ஐயா நீரிவ்விதமாய் அருந்தவமே புரிந்தால்
 அமரர் முனிவர்கதி எவ்வாறு—அதை
துய்யரே இப்பொழுது தோன்றும்வாறு எனக்கு
 துரிதமுடனே பதில்விடை கூறு—நாதா ப

இத்தவத்தை கலைக்க இந்திரனும் உன்னிடம்
 இப்போதெனையனுப்பினான் காணும்—செய்த

சத்தியத்தின் பொருட்டு சாமிஉனை பகைக்க
தனித்து வந்தே னுந்தனிடம்யானும்—ஈசா ப

பாலன் மலர்க்கணையால் பரனே உன்மேல்விட்டாலும்
பாதுகார்த்து அந்தபிழை பொறுத்தருளும்—அந்த
சீலன் தியாகராஜனும் செப்பும் கவிதனக்கு
சந்ததமும் கிருபைவைத்தருளும்—நாதா. ப

பொது எண்சீரடி விருத்தம்

பஞ்சபாணன் இவ்விதமாய் உரைத்துக்கொண்டு
பரிவுடனே கரும்புவில்லை கரத்தில்தாங்கி
மிஞ்சியே மலர்க்கணையை தானெடுத்து
மன்மதனும் ஈஸ்வரன்மேல் தொடுத்தபோது
பிஞ்ஞகற்கு அளவிலாக் கோபம்மூண்டு
பாரதவம் தனைவிடுத்து நெற்றிக்கண்ணை
சஞ்சலமாய் தான்திறந்து உற்றுப்பார்க்க
தருணமே அங்கஜனும் சாம்பலானன்.

பொது லாவணி

புரந்திரன் சொல்லைக்கேட்டு பரமன் மீதிலேகணை
பஞ்சபாணன் விடுத்தான் அப்போது—மதனும்
சாரதியும் ரதமும் கிளிவாகனம் மீன்கொடி
சாம்பலாய் தானெரித்தார் தப்பாது—அங்கே பு

மதனுடன் வந்தபெண்கள் மோதியறைந்துக்கொண்டு
மாண்டஇடந்தனிலே நின்றழுதார்—உடனே
கெதியின்றி ஓடிவந்து கிளிமொழி ரதியிடம்
கலங்கி யழுதுமவர் கூறிடுவார்—அப்போ பு

பொது எண்சீரடி விருத்தம்

அங்கஜனும் அரன்விழியால் எரிந்தபின்பு
அவனுடனே வந்தபெண்கள் அலறிக்கொண்டு
நங்கையர்கள் ஓடிவரும் சமயந்தன்னில்
நலமுடனே ரதியும்மஞ்சம் தனில்துயின்று

பங்கப்பட்டு பஞ்சபாணன் பரமன்கண்ணால்
பற்றியே சாம்பலாய் எரிந்ததாக
பொங்கமுடன் கின்வுகண்டு எழுந்திருந்து
பாவையவள் பதறியே புலம்புவாளே.

இரதிதேவி நித்திரையைவிட்டு திடுக்கிட்டெழுந்து புலம்புதல்

லாவணி

ஐயையோ மன்மதனே அங்கஜனே சிங்காரா
அரன்விழி யாலெரிந்து மாண்டீரோ—என்னை
குய்யோ முறையோ வென்றுகூவி புலம்பவைத்து
காலனுலகத்திற்கு நடந்தீரோ—நாதா ஐ

பத்தரை மாற்றுள்ள பசும்பொன் திருமேனியை
பரமன் விழிக்கு இறை தந்தீரோ—எந்தன்
சித்தஜா உன்னை எந்த ஜென்மத்தில் யானுங்கண்டு
சேயிழையாள் மகிழ்வேன் அதிதீரா—நாதா ஐ

படுபாவி இந்திரனும் பகர்ந்த மொழியைக் கேட்டு
பர்த்தாவே போகவேண்டா மென்றேனே—அதைத்
தடுத்து ஈசனிடத்தில் தானே சென்று எரிந்தீர்
தையல்யான் நொந்தழுது வாடுறேனே—நாதா ஐ

எந்தன் மாங்கல்யத்திற்கு ஏமனாக இருந்தான்
இமையவர் வேந்தனெனும் படுபாவி—வெகு
அந்தமுள்ள மதனை அரன்விழிக் கிறைவா
அநேகநாள் காத்திருந்தான் கொடுந்துரோகி—நாதா ஐ

சண்டாள இந்திரனாலே சரசராஜனை யானும்
தருணமிழக்கவிதி நேர்ந்ததையோ—நீர்
மாண்டதால் என்மனது மாளாத்துயரருந்தி
மன்னவரே புலம்ப லாச்சுதையோ—நாதா ஐ

பொது எண்சீரடி விருத்தம்

மாதுரதியின் கணவன் மதனராஜன்
மலர்க்கணையை விடுத்ததினால் ஈசன்தானும்

ஓதவொண்ணுக் கோபமுடன் நெற்றிக்கண்ணுல்
ஒவ்வியமாய் மன்மதனை எரித்ததாக
நீதமுடன் சொற்பனமும் ரதியும்கண்டு
நிலைக்கவொண்ணு துயரமுற்று புலம்பும்போது
தோதுடைய தாதியர்கள் அருகில்வந்து
தேவிரதிதனை நோக்கிப் புகலுவாரே.

தாதிகள் சொல்லுதல்

லாவணி

இந்நேர வேளைதனில் என்ன சொற்பனங்கண்டு
எழுந்து திடுக்கிட்டுநீ புலம்புகிருய்—அந்த
மின்னெளிவதன அன்னமே ரதிதேவி
மனதின் துயரம் தன்னை விளம்பிடுவாய்—அம்மா இ

இரதி சொல்லுதல்

லாவணி

எந்தன் கணவனம்மா ஏந்தல் அங்கஜனவர்
ஈசன் விழியினுலே எரிந்ததாக—நான்
விந்தையுடன்கினவு வினயமுடனே கண்டு
வருந்திதுடிக்கிறேன் யான்மனம் நோக—தாதி எ

இரதி சொல்லுதல்

ஒப்பாரி

பாங்கியரே என்தோழி தீங்கில்லா என்கணவன்
பரமன்விழியால் எரிந்தார் அரிவையானு மேதுசெய்வேன்

படமுடியாத் துயரம் அடையவைத்தார் மன்மதனும்
பாங்கியரே எந்தனிட மாங்கல்யம் தானிழக்க

பசுபதியின் தன்னருளோ விசனமிக வாகுதடி
பஞ்சபாணன் தன்னையினி அஞ்சுகமே காண்பதெப்போ

பாவியந்த இந்திரனும் மேவியே யிங்குவந்து
பிஞ்ஞகன் தபசழிக்க அங்கஜனை வற்புறுத்

புரந்திரனைத் தான்நோக்கி மாரனவர் என்கணவன்
பழியிதுகா ணிந்திரனே அழிவுவரு மாதலினல்
பாம்பணிந்தோன் தன்தபசை நாமழிக்கப் போகாதென
பரிவுட னுரைக்கையிலே அரிமகனை வற்புறுத்தி
போகும்படியாகச் செய்து ஏகினன் சுரேந்திரனும்
புகன்றதோர் வார்த்தையெல்லாம் வகையுடனே யானறிந்து
புத்தியது வேணமட்டும் சித்தஜனுக்கே வுரைத்தேன்
பாவையென்னு லானமட்டும் மேவியவரைத் தடுத்தும்
பேச்சதனை மீறிவிட்டு மச்சரூபன் தன்சுதனும்
பண்புடனே சாரதியை இன்பமுடனே அழைத்து
பதமுடனே தேரமைத்து இதமுடனே வாருமென்று
பக்ஷமுடன் ரதத்தில் இஷ்டமுடனே யமர்ந்து
பூதநாதன் தபசுநிலே எதிரினிலே வந்துநின்று
பூங்கணையைத் தான்தொடுக்க சங்கரனுர் தான்திகைத்து
பார்வையினுலே எரித்தார் சீர்மிகுந்த தாதிகளே
புத்திரியின் கணவனென்று சற்றேனு மெண்ணுமல்
பஸ்பமாய் செய்தாரே பரசுபாணி என்தகப்பன்
பர்த்தாவைக் கொல்லுதற்கு காத்திருந்தான் என்தகப்பன்

பிதாவல்ல எந்தனுக்கு சதானந்த ஈசனவர்
பகையாளி யாகுமடி வகையுடைய தாதிகளே

பாரளந்தோன் தன்மகனை நீறணிந்தோன் கொன்றதினல்
பலனநிகம் கண்டாரோ கொலேக்காரன் என்தகப்பன்

புலம்பும்குரல் கேட்கலேயோ கலக்கமிலா சிற்பரனே
பாரினிலுன் புத்திரியான் சீர்குலேய காரணமோ

புரமூன் றெரித்தவனே கரத்தில் மான்தரித்தவனே
பொல்லாதவ னென்று தொல்லுலகில் சொல்லும்படி

பாதகங்கள் செய்யாதே காதகனே என்தகப்பா
பரந்தாமன் தன்மகனை துரிதமுடனே எழுப்பி

பைங்கொடியா ளெந்தனிடம் பொங்கமுடன் கொண்டுவந்து
பித்தகனே விட்டிடுவாய் இத்ததியே என்தகப்பா

இரதிதேவி சொல்லுதல்

எண்சீரடி விருத்தம்

மாதுரதி இவ்விதமாய் மனம்வருந்தி
மங்கையரே தாதிகளா என்னசெய்வேன்
கோதிலா அங்கஜவேள் தன்னையந்த
கொலைக்கார என்தகப்பன் எரித்திட்டாரே
மேதினியில் என்கணவனுடனே யானும்
மாசூகிமையாய் உடன்கட்டை ஏறியிப்போ
தோதுடனே சொர்க்கலோகம் யாங்கள்சென்று
சுகித்திருப்போம் எப்பொழுதும் தாதிமாரே.

இரதி சொல்லுதல்

லாவணி

புருஷன் மடிந்தபின்பு பாவையா னிருப்பது
பிசகடி எந்தனிட சேடியரே—இந்த
சிறுவயதிலே யானும் தாலியிழப்பதற்கு
சித்துசெய்தா னிந்திரன் தோழிகளே—எந்தன் பு

தாதிகள் சொல்லுதல்

ஷை லாவணி

அம்மணி ரதிதேவி ஆயாசப்படவேண்டாம்
அங்கஜனும் எழுந்து வருவாரம்மா—வீணாய்
விம்மியழுது நீயும் விசனம்மிகவேகொண்டு
வருந்திடில் யாதுபயன் நீயும்சும்மா—தாயே அ

இரதி சொல்லுதல்

லாவணி

சித்துசெய்து இந்திரன் சித்தஜன் தன்னைக்கொல்ல
சூதுவாது புரிய இங்குவந்தான்—அந்த
சத்துசித்தானந்தனின் தவத்தையழிக்கவென்று
செம்மலாம் மாரனிடம் தான்புகன்றால்—சகி சி

தாதிகள் சொல்லுதல்

ஷை லாவணி

பரமனின் தவத்தினால் பாரெல்லாம் அக்கினியாய்
பற்றிஎரிவதினால் இந்திரனும்—மதனை
தருணமனுப்ப ஈசன் தானே எரித்ததினால்
தயவாய் எழுப்பிடுவார் தற்பரனும்—அம்மா ப

இரதி சொல்லுவது

லா வ ணி

சத்து சித்தானந்த சுத்தசைதன்யனான
ஜோதிமயானந்த சிற்பரனும்—அவர்
சித்தமது களித்து தீயாயெரித்திட்டாரோ
சேடியரே அறியேன் தற்பரனும்—தாதி ச

தாதிகள் சொல்லுதல்

ஷை லாவணி

கரித்தோலதை யணிந்த கங்காதரனும் உந்தன்
கணவன்தனை எழுப்பி அனுப்பிடுவார்—அவர்
சிரித்து எரித்ததினால் சேயிழையே ரதியே
சீக்கிரத்திலுன் நாதன் தான் வருவார்—அம்மா க

இரதி சொல்லுதல்

ஷை லாவணி

கோபமுடன் எரித்த கொன்றையணிந்த ஈசன்
கணவனை ஏனெழுப்பப் போறாரம்மா—இந்த
பாவியானும் வருந்தி புலம்புவதுமந்த
பரமசிவனாருக்கு சம்மதமா—சகி கோ

தாதிகள் சொல்லுதல்

லா வ ணி

அங்கஜதீரருக்கு ஆபத்துநேராதம்மா
அரனிடம் உயிர்பெற்று தான்வருவார்—வீணாய்
சோங்கிமனம் வாடாதே சுகமுடன் எப்பொழுதும்
சுகித்து புவியதனில் வாழ்ந்திடுவீர்—அம்மா அ

இரதி சொல்லுதல்

லாவணி

ஆயுள் இருக்கும் போதே யாருந்துணையில்லையே
அவருயிர் போனபின்பு வருவாரோ—நீங்கள்
நேயமுடனெனக்கு நியாயமென்ன உரைத்தும்
நிலைக்கவில்லை மதனும் வருவாரோ—சகி ஆ

தாதிகள் சொல்லுவது

லாவணி

மனது துடித்து நீயும் மாயேக்கமாய் வருந்தி
மாதே புலம்புவதில் பயனேது—தாயே
உனது கணவனவர் உயிரிழந்த இடத்தில்
வருந்தினால் எழுப்புவார் புவிமீது—அம்மா ம

இரதிதேவி சொல்லுதல்

லாவணி

ஈசனிடத்தில் யானும் இப்பொழுதே யணுகி
எந்தன் மணவாளரை எழுப்பும்படி—செய்து
நேசமுடனழைத்து யானே வருவேனம்மா
நாயகிமாரே இங்கு யிரும்சேடி—நீங்கள் ஈ

பொது வசனம்

இரதிதேவி தன்னுடைய தாதிகளுக்கு சொல்லிவிட்டு, தன் கணவன் மாண்ட இடத்திற்கு வருகின்றபோது, மகாவிஷ்ணுவும், தேவேந்திரனும், நான்முகனும் வந்து, மன்மதன் எரிந்த சாம்பலண்டை, மகாவிஷ்ணுவும், நான்முகனும், இந்திரனும், ரதிதேவியும் புலம்பும் விதம் காண்க.

மகாவிஷ்ணு புலம்புதல்

லாவணி

ஐயையோ மன்மதனே அழகுள்ள புத்திரனே
அங்கஜா உன்னை எப்போ காண்பேனடா—ஈசன்

மாயையோ நீமடிய் மன்னவா இப்புவியில்
  மாளாத்துயரருந்த வைத்தாயோடா—மகனே ஐ

சங்கரனின் மகளாம் தையல்மெய் ரதிதன்னை
  சந்தோஷமுடன்மணம் சூட்டி வைத்தேன்—வெகு
மங்களமாகவே மாக்ஷியுடனிராமல்
  மலர்கணை எய்து நீயும் மடிந்தாயோ—மகனே ஐ

பெற்றஅருமையென்ன பேரிட்ட நேர்த்தியென்ன
  பஞ்சபாணனே ரதி சுகபோகா—நீ
சற்றே எழுந்திருந்து சித்தஜனே இப்போது
  தந்தை எந்தனிடத்தில் பேசாயோ—சுதனே ஐ

இந்திரன் புலம்புதல்

லாவணி

உலகினில் கீர்த்திஒங்கும் உலகளந்தோன் மகனே
  உத்தமா உன்னையெப்போ காண்பேனோ—சஞ்
சலமிகவாகுதைய்யா சமர்த்துள்ள மன்மதனே
  சற்றே எழுந்திருந்து பேசாயோ—நீயும் உ

பரமன் தபசழிக்க பாவியான் சொன்னவாறு
  பக்ஷமுடனே வந்து எரிந்தீரோ—இந்த
தருணம் உனைக்காணாது தயங்குது என் மனது
  தையல் ரதிதேவியின் சுகுமாரா—தீரா உ

உந்தன் ரதமுமெங்கே உத்தம சாரதியும்
  உயர்வான வாகனக் கிளியுமெங்கே—இன்னும்
அந்தமுள்ள மீன்கொடி எல்லோரும் ஈசனிட
  அனலால் எரிந்து பஸ்ப மானீரோ—ஐயா உ

பிரம்மன் புலம்புதல்

லாவணி

அங்கஜனே இப்போது ஆவலுடன் எழுந்து
  அவசியம் ஒருவார்த்தை பேசாயோ—நீயும்
சங்கரலிங்கனின் மேல் தனிமலர் கணை ஏவி
  சாம்பலாக எரிந்து போனாயோ—ஐயா அ

பூவுலகிலுள்ளோர்கள் பஞ்சபாணரே உன்மேல்
பாசமதிகம் வைத்து இருந்தாரே—உந்தன்
ஆவிதுடித்து இப்போ அரன்விழியாலே இங்கு
அனல்பற்றி எரிந்தீரோ மன்மதரே—ஐயா அ

தொல்லுலகம் தனிலே ஜீவசிருஷ்டிக்கு
தோதுள்ள அங்கஜனே மாண்டாயோ—உலகில்
எல்லாப்பிராணிகட்கும் ஆசையதனைத்தரும்
அன்புள்ள சித்தஜனே வாராயோ—ஐயா அ

இரதிதேவி ஒப்பாரி

அங்கஜரே ஒப்பாரா மங்கை என் சுகுமாரா
ஆசைமிகும் மெய்ரதியென் நேசமதை தான்மறந்து
அரன்விழிக்கு தானிரையாய் சுரர்பதியால் மாண்டீரோ

அறியாப் பிராயத்திலே பரிவாகவே யானும்
அருஞ்சிறை தனிலிருக்க பரமனே சம்மதமா
அன்றணிந்த மாங்கலியம் இன்றிழக்க காரணமோ

அமரா பதியாளும் இமையவர் வேந்தனவர்
அருளிய வார்த்தைதனை சரியெனவே நீர்மதித்து
ஆரணங்கு என்மொழியை தீரமுடனே மறுத்து

அத்தியுரித்தோன் தபத்தை சித்தஜரே நீர்கலைக்க
ஆரவாரமாகவந்து வீரியமாய் கரும்புவில்லில்
அருமலர் கணைதொடுத்து சுடரொளியாய் எரிந்ததினால்

அடியேன் உன் நாயகியாள் மடிவேன்காண் உன்னுடனே
ஆளனை பிரிவதற்கு தாளவில்லையே மனது
ஆதிமூலன் புத்திரனே நீதியுள்ள என்கணவா

அவனிதனி லென்னபழி சிவனுக்குயான் செய்தேனோ
அழகுமலர் தானிழக்க மழுதரித்தோன் தன்னருளோ
ஆகாது ஆகாது பாக்கியாள் யானிருக்க

அரிவையாள் உன்னுடனே தருணமே மடிந்திடுவேன்
அனியாயம் செய்தாரே கனிவுடைய என்தகப்பன்.

இரதி சொல்லுதல்

லாவணி

எவ்வளவோயெடுத்து ஏந்திழையாளுரைத்தும்
 என்னை மறுத்துவிட்டு வந்தீரே—நீரும்
ஒவ்வியமாக அந்த உமாபதி மீதில்கணை
 விட்டு அவர் விழியால் எரிந்தீரே—நாதா எ

அரிவை உனைப்பிரிந்து அவனி தனிலிருக்க
 ஆகாது ஆகாது மன்னவனே—இப்போ
பரிவுடனே இந்தப் பாதகி உந்தனுடன்
 பர்த்தாவே மாண்டிடுவேன் சித்தஜனே—நாதா எ

எந்தன் மனதுமெத்த ஏங்கித்துடிக்குதையோ
 எழுந்து எனக்கு விடை கூருயோ—நான்
நொந்து அழுகிறது நந்திநம்பனவர்க்கு
 நலமே எந்தனைக்கண்ஞல் பாராயோ—நாதா எ

குங்குமம் மஞ்சளுடன் கோதைச்சரடிழந்தேன்
 கூறும்மலர் வகைகள் வேம்பாச்சே—இந்த
மங்கையாள் யானுமெத்த மனது கலங்கிடவும்
 மானிலந்தன்னில் வெகு இழிவாச்சே—நாதா எ

ஆபரண மிழந்தேன் ஆளனையு மிழந்தேன்
 அனுதியா ஞகினேனே மகாதேவா—உந்தன்
சாபவிதிப் பயனே சண்டாளி கைவளையல்
 தானே கழற்றவைத்தாய் மகாதேவா—சிவமே எ

என் மண்வாளன் தன்னை ஏந்தலே நீ எரிக்க
 எத்தனை நாட்களாக காத்திருந்தீர்—உந்தன்
எண்ணந் தனக்குகந்தாப் போலவே இந்திரனும்
 ஏவிஞன் உன்னிடத்தில் ஒய்யாரா—சிவமே எ

இரதி சொல்லுதல்

எண்சீரடி விருத்தம்

மங்கையா னென்னேரம் அழுதபோதும்
 மடிந்திட்ட சித்தஜனும் வரப்போருரோ

இங்கிர்தமாய் ஈசனிட அருகில்சென்று
இனிதுடனே புலம்பினல் மனதிரங்கி
பொங்கரவ மதையணிந்த பரமன்தானும்
பரிதாபம் தாளாமல் எந்தன்நாதன்
அங்கஜவேள் தனையெழுப்பி எந்தனோடு
அனுப்பிடுவார் ஆதலினல் செல்குவேனே.

இரதிதேவி சிவனிடத்தில் புலம்புதல்

ஒப்பாரி

பாம்பதனைத் தானணிந்த சம்போசிவ சங்கரனே
பரமே என்தகப்பா அருமைமகள் வந்தேனையா
பெற்றெடுத்த என்தகப்பா சிற்பரனே அன்று நீரும்
பாரளந்தோன் புத்திரனும் சீரான மாரனுக்கு
பரிவுடனே மாங்கலியம் திறமுடனே சூட்டிவைத்து
பருவரதியும் மதனும் ஒருமித்து வாழ்நாளில்
பஞ்சபாணன் தனைமடித்து சஞ்சலங்கள் மூட்டிவிட்டாய்
பாரினிலே மாங்கலியம் வீரியமாய் இழக்கவைத்தாய்
பார்வையால் மன்மதனை நேர்மையுடனே எரித்தாய்
பாதகம் செய்தீரே சதாசிவமே என்தகப்பா
பணிந்தேன் உன்பாதமையா கனிவுடனே இப்பொழுது
புத்திரியான் வருந்துவதை கர்த்தாவே பார்த்தருளும்

இரதிதேவி சிவனை தோத்திரஞ்செய்தல்

ஷெ லாவணி

கரத்தில்மான் மழுதன்னை பொருத்தமுட னணிந்த
கங்காதரனே கண்பாரும் பாரும்—முப்
புரத்தை எரித்த ஈசா புத்திரியானும் வந்தேன்
பரமே எந்தனுக்கருள் தாரும் தாரும்—சிவமே க

தஞ்சமென் றடைந்தோரை தர்க்காக்கும் சிற்பரனே
தயவில்லையோ எந்தனின் மீது மீது—முன்னே
செஞ்சடை தன்னில்கங்கை தன்னை அணிந்தவரே
சாமி ஏனோ யின்னமும் வாது வாது—பரமே உ

சத்தி உமைமகிழும் சத்து சித்தானந்தனே
தாளடியைப் பணிந்தேன் ஐயா ஐயா—நீரும்
இத்ததி கண்திறந்து எந்தனை காத்தருளும்
ஏழை உன்னடியாளை மெய்யா மெய்யா—சிவமே க

காருண்ய மெய்ப்பொருளே வேறு துணையுமில்லை
கர்த்தருள்வ துந்தனின் பாரம் பாரம்—இப்போ
சீருடன் உன் மகள்யான் கோரி வருந்துகின்றேன்
சிவமே எனைக்கண்பாரின்னேரம் நேரம்—பரனே க

பொது வசனம்

ரதிதேவி ஈசனிடத்தில் புலம்பும்போது ஈசன் கண்ணைத் திறந்து இரதிதேவியை நோக்கி கூறுவது.

பரமசிவன் விருத்தம்

எந்தனின் மகளே கேளாய் இனிதுடன் இந்த வேளை
நொந்துநீ வருந்திக்கொண்டு நோக்கியே என்னிடத்தில்
வந்தது ஏன்தானம்மா வகையுடன் எந்தனுக்கு
வந்ததோர் விபரம்தன்னை அன்புடன் உரைசெய்வாயே.

பரமசிவன் ஒப்பாரி

மாதுரதியே மகளே வாதுடனே இவ்வேளை
மனம் வருந்தி இப்பெரிய வனங்களது தான்கடந்து
மாமுனிகள் தவமிருக்கும் நேமமுள்ள குகைகளெல்லாம்
மங்கையரே நீ தாண்டி தாங்கமுடியாத் துயரால்
மாக்ஷிமையாய் என்சமுகம் பாசமுடன் வந்ததென்ன
மட்டிடாத உன்குறையை திட்டமுடனே உரைப்பாய்

ஷ லாவணி

ஏது வருத்தங்கொண்டு ஏங்கி புலம்புகின்றாய்
எந்தன் மகளே நீயும் சொல்வாயம்மா—மனம்
வாதுபுரிந்திடாது வண்மையுடனே என்முன்
ஓதிடுவாய் ரதி தேவியம்மா—மகளே ஏ

தன்மையுடனே உனை தான்பெற்ற தந்தையானும்
தரணியில் உயிருடன் யிருக்கையிலே—உனக்கு

என்ன குறைகள்நேர்ந்து இவ்விதமாய் புலம்பி
எந்தனிடத்தில் வந்தாய் என் மகளே—அம்மா ஏ

சாது ஜங்கமர்களும் சித்தர் முனிவர்களும்
தபம்செய்யும் வனங்களெல்லாம் கடந்து—வெகு
தீதுபுரியும் சிங்கம் கரடி புலிஉலாவும்
துஷ்ட வனங்களெல்லாம் நீ கடந்து—மகளே ஏ

தலைவிரி கோலமாய் தரையில் புரண்டிடவும்
சங்கதி எந்தனுக்கு உரைப்பாயே—நீயும்
அலரி துடிதுடித்து அவனிதனில் வருந்தி
ஆயாசப் படவேண்டாம் என் சேயே ஏ

இரதி சொல்லுதல்

ஒப்பாரி

பரமனே என்தகப்பா மாரவேள் மாண்டதினால்
பகரொணு துயரமுற்றேன் தோகையா ளிப்போது
பாழடைந்த ஊரானே தோழனு ரில்லாமல்
பாவையான் துன்பமுற்று ஆவலுடன் இங்குவந்தேன்
பஞ்சபாணன் தனையிழந்து சஞ்சலத்திற் குள்ளானேன்
பக்ஷமுள்ள தந்தையேநீர் இச்சைவைத்து இப்பொழுது
பர்த்தாவை நீரெழுப்பி இத்ததி அனுப்பிடுவீர்
பலநாளும் உந்தனையே தலைமீதினில் துதிப்போம்
பாம்பை யணிந்தவரே சாம்பசிவ னென்பவரே
பழுதில்லா சந்திரனை அழுத்தமாய் தரித்தவரே
பக்தர்களை ஆதரிக்கும் சத்தி உமை நாயகரே
பலநாளும் தேவரெல்லாம் நலமாய் துதித்தேற்றும்
பரசுபாணி உந்தனையே சரணமென யான்துதித்தேன்

பரமன் விருத்தம்

அன்னமே ரதியேகேளாய் அன்புடன் வுரைப்பே னென்று
மன்மதன் இங்குவந்து மிக்கவும் கர்வமாக
என்மீதில் கணைவிடுத்தான் ஏறெடுத்தவனை பார்த்தேன்
கண்மணி உந்தன் நாதன் கடுகியே எரிந்தா னம்மா.

பரமன் லாவணி

யானும் இமையமலை யருகினில் தவம்செய்து
இருந்தேனம்மா மகளே ரதிதேவி—மதன்
தானுக கர்வங்கொண்டு தனிமலர்கணைவிட
திறந்தேன்கண்ணை எரிந்தான் அவன் தாவி—மகளே யா
தவம்யானும் செய்ததினல் தீங்கு அவனுக்கென்ன
தோன்றி எந்தனின்மீது கணைதொடுத்தான்—அவன்
அவமானமே யடைய அழித்தே னவனுயிரை
அம்மணி ரதிதேவி அவன் மடிந்தான்—மகளே யா
வீணனகர்வம் தன்னை வெகுவாக பூண்டவர்கள்
வருத்த மடைந்திடுவார் என் மகளே—நீ
ஏனே இவ்விதமாக இளைத்து புலம்புகிருய்
யாதுக்கும் அஞ்சிடாதே என் மகளே—அம்மா யா

இரதிதேவி லாவணி

என்ன பிழைசெய்தாலும் எந்தன் முகத்தைப்பார்த்து
எழுப்பி தந்திடுமையா பரமேசா—இந்த
கன்னி எந்தனின் மனக் கவலை யகற்றுமையா
கழலடி யான்பணிந்தேன் ஜெகதீசா—சிவமே க
ஆசை மகளுக்காக அன்று அமைத்துவைத்த
அங்கஜ வேளல்லவோ பரமேசா—இன்று
மோசமெனைச் செய்யாதே மனதுவைத்தெந்தனிட
மன்னவரை எழுப்பும் ஜெகதீசா—சிவமே க

பரமன் எண்சீரடி விருத்தம்

அஞ்சிடாதே என்மகளே ரதியேகேளும்
அன்புடனே யானுரைக்கும் செய்திதன்னை
பஞ்சபாணன் தன்னையிதோ யானெழுப்பி
பக்ஷமுடன் தந்திடுவேன் பயப்படாதே
கொஞ்சியே இருவர்களும் குவலயத்தில்
குணமுடனே சுகபோக மாகவாழ்ந்து
சஞ்சலங்க ளின்றியே வாழ்ந்திருப்பீர்
தயங்கியே வருந்தாதே தருணம்நீயே.

பரமசிவன் வ-ம்:—குழந்தாய் இரதிதேவி! வீணாக வருந்தி புலம்பாதே; உன் அபீஷ்டம்போலவே உன் கணவனை எழுப்பித் தருகின்றேன்.

பொது வசனம்:-பரமசிவன் குண்டோதரனை அழைத்து மதன் எரிந்த சாம்பலை ஒன்றாக சேர்க்கச் செய்து அதின் மீதில் ஜலத்தை தெளித்து மன்மதனை எழுப்பும்விதங்காண்க.

பரமன் சொல்லுதல் லாவணி

எழுந்திரு மன்மதனே ஏகசந்தோஷமுடன்
ஏழுலகை அளந்தோன் தன் சுதனே—ஒன்றும்
அழிவின்றி இப்பொழுது அங்கஜனே நீயும்
அன்புடன் வாழ்ந்திடுவாய் மன்மதனே.

மன்மதன் உயிர்பெற்று சிவனை தோத்திரம் புரிதல்

லாவணி

சாது ஜங்கமர்கட்கும் தேவாதி தேவர்கட்கும்
தலைவராய் நின்ற சிவமே—எளியேன் உந்தன்
தாள்பணிந்தேன் மயமே
தோதுடனே உரைத்த தேவேந்திரனின் சொல்லை
தனையன் யானுணராது—உறுதிமொழி
தந்ததால் யானிப்போது
வாதுபுரிய உன்மேல் வந்தேனையா இங்கு
வள்ளல் கங்காதரனே—வருத்தமது
வைத்திடவேண்டாம் பரனே
மாதுஉமையவளின் நேசா
பாதுகார்த்தருள்புரி ஈசா
தீது புரிந்தவர்க்கு சாபமளிக்கும் எந்தன்
தற்பரனான சிவமே—தயாபரனே தா
கரத்தில் மான்மழுதன்னை கனமுடனே தரித்த
கர்த்தனே எனக்காரும்—கதருமெந்தன்
குறையது தனைத்தீரும்
பொருத்தமாய் பாம்பையெல்லாம் பூஷணமாய்தரித்த
பரமே தவத்தை யானும்—அழிக்கவந்து
பற்றியெரிந்தேன் காணும்

வருத்தங்களின்றி என்னை வகையா எழுப்பிவிட்டீர்
வந்த எந்தனை பரனே—இதுசமயம்
வணங்கினேன்காண் அரனே
கரித்தோல் விரித்து போர்த்த நாதா
உரித்தமாய் என்னைக் காரும் போதா
தருணம் எந்தனை நீரும் தயவுவைத்து ரக்ஷித்த
தற்பரானந்தசிவனே—தருணமுந்தன் தா
பிட்டுக்கு மண்சுமந்து பிரம்பாலடியும்பட்ட
பித்தகா எனைப்பாது—கார்த்திட்டதினால்
பதம் பணிந்தேனிப்போது
அட்டியின்றி நாரைக்கு அன்புடன் முத்தியீந்த
அரனே கங்காதரனே—உந்தனுடைய
அடியேன் யான் சங்கரனே
தாட்டிக மாக அன்று தருமர்தம்பி அர்ஜுனன்
தனக்கு நீ பாசுபதம்—கொடுத்ததுபோல்
தருவாய் வரப்ரசாதம்
கட்டிக்கனி ரதியும் யானும்
மேட்டிமையாய் சுகிக்கவேணும்
திட்டமுடனே தியாக ராஜன் கவிக்குநாளும்
துணையாசவாரும் சிவமே—சந்ததம் உனை தா

பரமன் சொல்லுதல் எண்சீரடி விருத்தம்

அங்கஜனே என்தபசை கலைக்கநீயும்
அன்புடனே மலர்கணையை விடுத்ததாலே
பாங்குடனே உனையெரித்து சாம்பலாக்கி
பிழைபொறுத்து இப்போது எழுப்பினேன்காண்
சங்கடங்கள் இனிமீது தரணிதன்னில்
சற்றேனும் புரியாமல் எந்தநாளும்
மங்கைரதி தன்னுடனே வாழ்ந்திருக்க
மன்னவனே வரமளித்தேன் கவனிப்பாயே.

மன்மதன் விருத்தம்

எந்தனின் பிழைபொறுத்து ஆதரித்திட்ட ஈசா
அந்தமாய் இனிமேல் யானும் அவதூராய் நடவேனையா

சிந்தையில் உனைத் துதித்து சேயிழை ரதியினோடு
சொந்தமாய் வாழ்குவோமே சோமனேகைலை வாழ்வே.

பரமன் ஒப்பாரி

அங்கஜனே சிங்காரா மங்கைரதியே கேளும்
அன்பாக இருவர்களும் இன்ப முடனாக
அரண்மனைக்கு போய் நீங்கள் பரிவுடனே எப்பொழுதும்
அன்னதானம் தானளித்து கண்யமுடன் வாழ்ந்திடுங்கள்
அண்டபுவன மெல்லாம் கொண்டாடும் பாவனையாய்
ஆளனும் தேவியுமாய் சாலவே வாழ்ந்திடுங்கள்

பரமன் சொல்லும் லாவணி

கண்மணியே ரதியே கருவிளமே யானும்
கழறும் வார்த்தையதனை கேளும் கேளும்—வெகு
நன்மை யுடனாகவே நாரணன் மைந்தனுடன்
நாடியே வாழ்ந்திடுவாய் நாளும் நாளும்—அம்மா க
பஞ்சபாணரே நீரும் பாருலகி லினிமேல்
பாதகம் செய்திடாதே சொன்னேன் சொன்னேன்-நீங்கள்
சஞ்சல மில்லாமலே சந்ததம் வாழ்ந்திருப்பீர்
சற்றும் தியங்கிடாதீர் இன்னே இன்னே—ஐயா ப

பொது விருத்தம்

பருவரதி மன்மதனும் மனமகிழ்ந்து
பக்ஷமுள்ள பரமனவர் கிருபையாலே
தருணமே சங்கடங்கள் தன்னை விட்டு
திறமுடனே இருவர்களும் மனைக்குயேகி
உறுதியுடன் சிவன்சொன்ன வாறுபோல
வினையமுடன் அன்னதானம் தானளித்து
ஒருமித்து இருவர்களும் உலகந்தன்னில்
உம்பர்பிரான் தனைத்துதித்து வாழ்கின்றாரே.

எரிந்தகக்ஷியார் சொல்லுதல்

எண்சீரடி விருத்தம்

ஆதிஓர்நாளையில்அரனார்தானும் அன்புடன்இமையமலைதனிலமர்ந்து
நீதியுடன் தபசுநிலை புரியும்போது நெருப்பாக இந்திரனின் மீதுவ்ச

[து

சேதியதைபுரந்தரன்மதனனுக்கு செப்பிடபரமன்மீது கணைதொடுத் ஜோதியுட னேளரிந்தான் ரதியும்வந்து ஜம்புலிங்கன் முன்புலம்ப எழுப்பினரே.

லாவணி

கேளுங்காணும்புலவா கவனமுடனிப்போது
  கழறுவேன்வார்த்தையது ஒன்று ஒன்று—முன்னோர்
நாளிலேமன்மதனும் நங்கைரதியுடனே
  நலமாகவாழ்ந்திருந்தார் நன்று நன்று—ஐயா கே

ஈசன்தபசிருக்க இமையமலையமர்ந்தார்
  இந்திரன்மீதுதணல் வீச வீச—அங்கே
வாசமுடனிருந்த வண்மையுள்ளமுனிவர்
  வயணமிதென்னவென்று பேச பேச—ஐயா கே

மாமுனிநாரதரும் மன்னன்இந்திரனைநோக்கி
  மாக்ஷிமையாக அவர் சொல்வார் சொல்வார்—இந்திரா
நேமமுடனேநந்தி நம்பன் தபசுநிலை
  நம்மையெரிக்குதென்ன புல்வார் புல்வார்—ஐயா கே

பிரமபுத்திரனவர் பகர்ந்தமொழியைக்கேட்டு
  பஞ்சபாணனிடத்தில் வந்தார் வந்தார்—மதன்
சுரேந்திரன் தன்னைக்கண்டு சொன்னவார்த்தைக்கிணங்கி
  சோங்கியவனுமனம் நொந்தான் நொந்தான்—ஐயா கே

இந்திரன்சொல்லைப்போல ஈசன்தபசழிக்க
  இமையமலையருகில் சென்று சென்று—அந்த
சந்திரசேகரன்முன் சதிராய்கணைவிடுத்து
  சாம்பலானன்விழியால் அன்று அன்று—ஐயா கே

புருஷன்மடிந்தசேதி பாவைரதியுணர்ந்து
  பரமனிடத்தில் வந்தாள் மாது மாது—அந்த
தருணமே ஈசனிடம் தவித்துப்புலம்ப மாரன்
  தன்னையெழுப்பினரப் போது போது—ஐயா கே

பற்பலபுராணங்களில் பரிவாயிச்செய்தியதை
  பெரியமஹான்களெல்லாம் சொல்ல சொல்ல—அந்த
சிற்பரனின்மைந்தனும் சிவஷண்முகனருளால்
  தியாகராஜனும்கவி புல்ல புல்ல—ஐயா கே

எரியாத கக்ஷியார் சொல்வது எண்சீரடி விருத்தம்

உங்களிட சாஸ்திரத்தின் மூட்டையெல்லாம் உத்தமரே நீரளக்க வேண்டாமையா, அங்கஜனும் எரிந்தெழுந்தா னென சொன்னீரே, அவன்ரூப மதனை தாங்கள் கண்டதுண்டா, மங்கைரதி ஈசனிடம் போனதுண்டா, மன்மதனை அவளெழுப்பி வந்ததுண்டா, பொங்கமுட னிங்கிருக்கும் சபையோருக்கு, புகலுவீர்இப்பொழுது புலவீர்நீரே.

கேழ்வி. ஐயா-காமனெரிந்தானென்று கருத்துடனுரைத்தீரே
கேட்கும்கேள்விக்குப்பதி லுண்டா உண்டா-அதின்
கருத்தைசபையோருக்கு கட்டாயமாயுரைத்து
கனமுடன்நாட்டுவீர் ஜண்டா ஜண்டா
நேமமுடன்ரதியால் காமன்பிழைத்தானென்று
நிதானமாகவேஉரைத் தீரே நீரே-அந்த
நந்திநம்பனவரும் நலமாயெவரைவேண்டி
நாடித்தவமிருந்தார் கூறே கூறே
சோமனவருக்கன்று பணிவிடைகள்புரிய
சீருடனெவரெவர் அங்கே அங்கே-வெகு
சிறப்புடன்இருந்தாரோ அவர்களின்பெயர்தன்னை
செப்புவீர்இப்பொழுது இங்கே இங்கே
சோபமாகவேநீரும் கனத்தஇச்சபைமுன்னே
கதைகள்படிக்கவேண்டா மிண்டா மிண்டா-அதின் கரு
அங்கஜனுக்குசிவன் அருந்தவம்செய்கிறதை
அறிந்துஉரைத்தவர்கள் யாரு யாரு-ஐயா
அந்தக்ஷணமேமதன் அழகுரதத்திலேறி
அசைந்துநடந்ததுண்டா கூறு கூறு
சங்கரனிருப்பிடம் மதனெப்படியறிந்தான்
சாற்றுவீரெந்தனுக்கு ஐயா ஐயா-அவன்
சரமதுதொடுத்துமே சுடராயெரிந்ததையார்
தையல்ரதிக்குரைத்தார் மெய்யா மெய்யா
மங்கைரதியும்யாரால் அறிந்துபுலம்பசிவன்
மனமதுதான்மகிழ்ந்து அன்று அன்று-அந்த
மாரவேளையெழுப்பி மகளுடன்அனுப்பின
மர்மமதனைக்கூறும் இன்று இன்று

கங்கைதனையணிந்த கர்த்தனின்மருமகன்
　　கனலாயெரிந்ததுவும் உண்டா உண்டா-அதின் கருத்

இன்னமுங்கேள்விஒன்று இயம்பிடுவேனதற்கு
　　இன்பமுடனேபதில் சொல்வீர் சொல்வீர்-அதை
எடுத்துரைத்தாலேநீரும் இந்தசபையிலுள்ளோர்
　　இனியுந்தன்மேல்சந்தோஷங் கொள்வார் கொள்வார்
அன்புடன்சித்திரையில் ஆனபருவநாளில்
　　அன்பர்பொங்கலிடுகின்றாரே நேரே நேரே-அது
யார்காணுமேற்படுத்தி அந்தமாய்செய்துவாரார்
　　அளிப்பீர்இதற்குபதில் நீரே நீரே
வண்மையுடனேநல்ல வைகாசிமாதத்திலே
　　வசந்தஉற்சவமதின் சேதி சேதி-தாங்கள்
வகையுடன்இப்பொழுது வந்தசபையோருக்கு
　　வழுத்தினால்உந்தனுக்கு கியாதி கியாதி
கண்யமாய்ஆனிமாதம் சுனரதம்ஓடுவதின்
　　காரணம்தன்னைக்கண்ட துண்டா உண்டா-அதின் கரு

ஆடிமாதம்தனிலே அன்பர்பதினெட்டாம்நாள்
　　ஆற்றிலேஸ்நான்ச்செய்வ தென்ன என்ன-அதை
அவனிதனிலேஎவர் ஏற்படுத்தினார்களோ
　　அதையும்எடுத்துரையும் மன்ன மன்ன
நாடியே ஆவணியில் நலமுடன்ஐங்கரர்க்கு
　　நருமலரைசிரசில் சூடி சூடி-வெகு
நல்லகனிவகைகள் எள்ளுருண்டைதோசையும்
　　நாட்டிலுள்ளோர்வைப்பதேன் நாடி நாடி
தேடிபுரட்டாசி திங்களததனிலே
　　திறமாய்பிதுர்தேவதைக் காக ஆக-வெகு
திண்ணமாய்காய்கறிகள் அரிசியும்அந்தணர்க்கு
　　தருகின்றாரே எதற்காக ஆக
கூடிஐப்பசிமாதம் தீபாவளியில்ஸ்நானம்
　　குணமாய்செய்வதற்குவிடை யுண்டா உண்டா-அதின் கரு

சீர்த்தியாய்கார்த்திகையில் தேவாலயங்களிலே
　　சொக்கபானையும்மட்டை கட்டி கட்டி-அதை

சிறப்புடனேகொளுத்தும் சங்கதியைசபையில்
சொல்லுவீரேமுண்டாவை தட்டி தட்டி
மார்கழிமாதத்திலே மகிழ்வாய்சிதம்பரத்தில்
மாகாளியும்சிவனும் ஒன்றாய் ஒன்றாய்-நடனம்
மேன்மையுடன்புரிந்த மகுத்துவஜதீகத்தை
மாக்ஷிமையுடன்சொல்லும் நன்றாய் நன்றாய்
நேர்த்தியாய்தைமாதம் நன்னயமுதற்றேதி
நலமாய்பொங்கலிடுவ தென்ன என்ன-அதை
நியாயமாயிப்பொழுது நவிலுவீர்சபையோர்க்கு
நீதிதவறிடாதே மன்ன மன்ன
கீர்த்தியாய்தக்கவிடை கண்யமாயுரையாது
காட்டிபிரட்டாதேஉன் முண்டா முண்டா-அதின் கரு
ஜோதியாய்மாசிமாதம் திவ்யமகமதனில்
தேவாதிதேவரொன்றாய் கூடி கூடி-வெகு
சந்தோஷமாயவர்கள் ஜலக்கிரீடையாடிபின்பு
சன்னதிக்கேன்வாராரோ தேடி தேடி
நீதியாய்அம்மாதத்தில் மூன்றாம்பிறையைக்கண்டு
நீளமாய்கம்பமொன்று நாட்டி நாட்டி-அடுத்த
நன்னயபங்குனியில் அமரபக்ஷதிதியில்
நாட்டமாய்கம்பத்தில்தீ மூட்டி-மூட்டி
பாதிமதியணிந்த பரமனல்மன்மதனும்
பற்றியெரிந்தானென்று வாடி வாடி-இந்த
பாரினிலிதைஎவர் பகர்ந்தாரவர்பெயரை
பக்ஷமாயுரைப்பீர்முன் னடி நாடி
கியாதிமிகுத்ததியாக ராஜன்கவிபோல
காருலகத்திலே உண்டா உண்டா-இதின் கருத்தை

மத்யஸ்தர்கள் சொல்லும் லாவணி

ஏதுக்காகநீங்கள் இவ்விதமாய்சண்டைகள்
இட்டுதூஷிக்கின்றீர்கள் இப்போது அதை
ஓதுவேன்உங்களுக்கு உண்மையானசெய்தியை
உத்தமரேஅறிவீர் தப்பாது வீணய் ஏ
அன்னம்புசித்தபின்பு அங்கத்தில்கொழுப்பேறி
அவயவங்கள்செய்யும் சேஷ்டையினல் நமக்கு

இன்பமதிகமூட்டி இறப்புக்கும்பிறப்புக்கும்
ஈடாக்குவதுநம் மனமதமே ஐயா ஏ
மனமதத்தைதான் அன்பர் மன்மதனென்றுசொல்வார்
மற்றதுஒன்றுமில்லை தெரிவீரே கடுஞ்
சினமதுகொள்ளாமலே சிறுவன்தியாகராஜனின்
சொல்பிழைதனைபொறுத் தருள்வீரே ஐயா ஏ

வாழி விருத்தம்

சத்தியும் சிவனும்வாழி சீதரன் அயனும்வாழி
சித்திகண பதியும்வாழி ஷண்முகன் வாணிவாழி
நித்தமும் கவியுரைக்கும் நாவலர் பாவலரும்வாழி
பத்தனும் தியாகராஜன் பலநாளும் வாழிவாழி.

எரிந்தகக்ஷி உபாத்தியாயர்

அருள்வாக்கு - திருச்சி

துரைசாமிநாவலர் அவர்களால் பாடியது

விருத்தம்

மன்மத வருடமாதி வளம்பெருஞ் செயவிருக
இன்பது அறுவதுக்குள் எழில்விசை யாண்டில்மாசி
அன்புரு அம்மாவாசை அடுத்ததோர் மூன்றும்நாளில்
ஜென்மித்த பிறையில்தானே சித்தஜன் உதித்தானன்றே.

எண்சீரடி விருத்தம்

உருவமில்லா மன்மதனே மாய்கையோடு
ஒத்திருந்தான் கிரேதா யுகத்தில்அப்பா
வருவதுகேள் திரேதாயின் வனசரூபி
வஸ்தோடு கலை புரிந்தான் மௌனஞானி
கெர்வமது தனிலதற்கு திருமால்கேட்க
கேடையமும் பஞ்சபாணன் வில்லும்கிள்ளை
சுறுவாகிய துவாபரமாம் யுகத்தில்ஜோதி
சுட்டபின்பு கலியுகத்தில் அரூபியாச்சே.

நூதன பெரிய நவரத்தின ஒப்பாரி முற்றிற்று.

மலர்மகள் விலாசம் பிரஸ், சென்னை - 1. (12-8-59)

மலர்மகள் பதிப்பு

பீதாம்பர ஐயர் ஜாலம் 2000

இவ்வுலகத்திலுள்ள எல்லோரும் ஆச்சரியப்படக்கூடிய ஜாலங்கள் அநேகமாக யிருக்கினும் அப்பேர்ப்பட்ட வித்தைகளைத் தாம் தாமே செய்து அவர்களுடைய பிரமைகளை நிவர்த்தி செய்துகொள்வதுநலம். ஆகையால் இந்தப் பீதாம்பர ஐயர் ஜாலம்-2000 என்னும் புத்தகத்தை ஒவ்வொருவரும் வாங்கிப் பழகி இன்பத்தை அடைய வேண்டியது அவசியம். இதில் காணும் ஒவ்வொரு ஜாலவித்தையையும் அனுபவமாகச்செய்து கண்ணால்பார்த்து மனோதிருப்தியடைந்து மற்றவர்களுக்கும் ஆனந்தத்தை விளைவிப்பது உசிதம். ஆதலால் அவ்வித வித்தைகள் அடங்கிய இப்புத்தகத்தை ஒவ்வொருவரும் கண்ணுராவிடில் ஆவலடங்காது. இதை ஒருமுறை வாசித்தவுடன் இந்திர மஹேந்திர வித்தைகளைச் செய்ய முயலுவார்கள். விநாயகர் அந்தரமாகப் போதல், தேவர்களைக் காட்டல், அஞ்சனம் செய்யும் வித்தை, கண்கட்டுவித்தை, கோகர்ணவித்தை, கஜகர்ணவித்தை, சர்வ வசியம், மூப்பு செய்பம் ஜாலம், சர்வ வசிய ஜாலம், மணலை அல்வா செய்யும் ஜாலம், இராஜ வசியம், குட்டிசாத்தான் ஜாலம், வழக்குகள் வெல்லும் ஜாலம், பூதப் பிசாசுகள் விலகும் ஜாலம், குறி சொல்லும் ஜாலம், வைத்தியமுறைகள் இவைபோன்ற 2000-ஜாலங்களுடன் அச்சிட்டு அழகிய பையிண்டுசெய்துள்ளன. விலை ரூ 3-50

கனவுநூல் திறவுகோல்

இக்கனவுநூல் பண்டையதென்றே கூறலாம். நம்நாட்டுப் பெரியோர்களும் அரசர்களும் இதிகாச புராணங்களில் தாம் கண்ட கனவின் நன்மை தீமைகளை முன்னமே அறுதியிட்டுச் சொல்லியிருக்கின்றார்கள். மானிடப்பிறவி எடுத்தோர் யாவரும் நேரும் நன்மை தீமைகளைச் செவ்வனே அறிந்துகொள்ள வேண்டுவது கடமையல்லவா? ஆண்டாளும் தான் கண்ட கனவு நற்கனவாக முடிந்து கண்ணனைக் கடிமணங்கொண்டாள் என்பது யாவரும் அறிந்த விஷயமே. ஆகையால் கனவு காண்பதைச் சுலபமாகத் தெரிந்துகொள்ளும்படியாக சென்னை கிறிஸ்தவ கலாசாலை மாஜி பிரதம தமிழாசிரியர் டி. வி. பார்த்தசாரதி அய்யங்கார் அவர்களால் எழுதப்பட்டு சுத்தப்பிரதியாய் அச்சிட்டிருக்கிறது. விலை ரூ. 1-25

[சென்னை மலர்மகள் பதிப்பை கவனித்து வாங்கவும்]

கிடைக்குமிடம்:

சரஸ்வதி புத்தகசாலை
175, செட்டியார் தெரு, கொழும்பு